Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 118

வியாழக்கிழமை
24 மார்ச் 2022

பங்குனி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

கொரோனா
நேற்று 59
மொத்தம் 6,24,863

உயிரிழப்பு
நேற்று 05
மொத்தம் 16,445

"கிடுகிடு..."
**விலை வாசி**
பக்.8 இல்



அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி, மக்கள் விடுதலை முன்னணியால் (ஜே.வி.பி.) நேற்றுப் பிற்பகல் கொழும்பில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப் பட்டது. அந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (ஏ-இ)

## கர்ப்பிணி மனைவிக்கு பலாப்பழம் பறித்த கணவன் குத்திக் கொலை!

கொழும்பு, மார்ச் 24
கர்ப்பிணி மனைவி ஆசைப்பட்டதால் மாமனாரின் காணியில் பலாப்பழம் பறித்த இளைஞர், குத்திப் படுகொலை செய்யப்பட்டார்.
இந்தச் சம்பவம் வடக்கு எல்பிட்டிய, எகொடகெதரவில் நடந்துள்ளது. இரு பிள்ளைகளின் தந்தையான கே.எம். ஷொன் லசந்த (வயது -34) என்ற இளைஞரே கொலை செய்யப்பட்டார்.
கர்ப்பிணியாகவுள்ள மனைவி ஆசையாகக் கேட்டதை அடுத்து, மாமனாரின் காணியில் உள்ள பலா 11

# இலங்கை இன்னமும் முன்னேற இடமுண்டு!

### அமெ. துணை இராஜாங்கச் செயலாளர் சுட்டிக்காட்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் வலியுறுத்து



**கொழும்பு, மார்ச் 24**
**இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடும் துணிச்சலான முடிவை வரவேற்கின்றோம். அத்துடன் இலங்கை ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்க எடுத்திருக்கும் முடிவும் முக்கியமானது. அதேநேரம் இலங்கை அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும், ஜனநாயக செயற்பாடுகளுக்கான சூழலை அதிகரிக்க வேண்டும்.** 11

## முஸ்லிம் கட்சிகள் ஆடிய 'டபிள் கேம்'

### தலைவர்கள் புறக்கணிப்பு சகாக்கள் பங்கேற்பு!

கொழும்பு, மார்ச் 24
ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில 16

## சர்வகட்சி மாநாட்டில் சன்னதமாடிய ரணில்!

### மத்திய வங்கி ஆளுநர்மீது கடும் சீற்றம் மன்னிப்புக் கோரினார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 24
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டின்போது, ஒரு கட்டத்தில் 15

## மாற்றிப்பேசிய பஸில் வறுத்தெடுத்த ரணில்



கொழும்பு, மார்ச் 24
சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் 15

## தமிழர்களது துணையே நாட்டின் மீட்சிக்கு வழி!

### சர்வகட்சிக் கூட்டத்தில் சித்தார்த்தன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 24
தமிழ் மக்களின் சுயநிர்ணய ஆட்சிமுறை என்கின்ற நீண்ட கால அபிலாஷையை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு நிரந்தர தீர்வை எட்டுவதன் ஊடாகவே தமிழ் மக்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். நாடு இந்த இக்கட்டான நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தமிழர்களினதும், புலம்பெயர் தமிழர்களினதும்பொருளாதார 15

## புத்தாண்டுக்கு முன்னர் நிவாரண பட்ஜெட்டாம்!

கொழும்பு, மார்ச் 24
சித்திரைப் புத்தாண்டின் முன்னதாக மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் புதிய வரவு - செலவுத்திட்டம் ஒன்று முன்வைக்கப்படும் என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். நாடு பெரும் 16

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஏப். 2ஆம் திகதி

### கீதநாத்தின் அழுத்தத்துக்குப் பலன்

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை நடத்து 15

## நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் உறுதி!

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24
நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பில் அர்ப்பணிப்புடன் உள்ளேன் என்று 16

## வரிசை யுகத்துக்கு விரைவில் முடிவாம்

கொழும்பு, மார்ச் 24
இந்த அரசு பாஸா, பெயிலா என்பது தேர்தல் வரும்போது தெரியவரும். நாட்டில் ஏற்பட்டுள்ள 11

## தெல்லிப்பழை ஆலயத்தில் நகை அபகரித்தோர் கைது

### இரு பெண்களுக்கு வலைவீச்சு



யாழ்ப்பாணம், மார்ச் 24
தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் நேற்று நடைபெற்ற தலைவாசல் இராஜகோபுர 15

## தமிழகம் சென்றவர்களின் குடும்பத்துக்கு அச்சுறுத்தல்

மன்னார், மார்ச் 24
தமிழகத்துக்குத் தஞ்சம் கோரிச் சென்றுள்ள இலங்கையர்களின் குடும்பங்களுக்கு, இலங்கை 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பல்கலைக்கழகங்களில் 16.6 சதவீத மாணவர்களுக்கு பாலியல் துன்புறுத்தல்!

**கொழும்பு, மார்ச் 24**

**இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை, பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் அதிகரித்துள்ளன. அரச பல்கலைக்கழகங்களில் 16.6 சதவீத மாணவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றனர் என ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், யுனிசெப் உடன் இணைந்து பழைய, புதிய பல்கலைக்கழகங்கள் மற்றும் மோதல்கள் நிலவிய பகுதிகளில் காணப்பட்ட பல்கலைக்கழங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்விலேயே மேற்படி விடயம் தெரியவந்துள்ளது.

ஆய்வின்படி, கணக்கெடுக்கப்பட்ட மாணவர்களில் 51 சதவீதத்துக்கும் அதிகமானோர் வாய்மொழி ரீதியான துன்புறுத்தலுக்கும், 34.3 சதவீதமானோர் உளவியல் வன்முறைக்கும், 23.8 சதவீதமானோர் உடல் ரீதியான துர்நடத்தைக்கும், 16.6 சதவீதமானோர் பாலியல் துன்புறுத்தலுக்கும் ஆளாகியுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தோரில் 44 சதவீதமானோர் வாய்மொழி பாலியல் வன்முறைக்கு ஆளானதாகவும், 22.3 சதவீதமானோரிடம் பாலியல் லஞ்சம் கோரப்பட்டது என்றும், 19.9 சதவீதமானோர் உடல் ரீதியான பாலியல் வன்முறையை அனுபவித்ததாகவும் அறிக்கை வெளிப்படுத்துகிறது.

அண்மைக்காலமாக இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை, பால் நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறை அதிகரித்து வருவது கவலை அளிக்கிறது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நெருக்கடியிலிருந்து மீட்பாராம் கோத்தா

## பஸில் சான்றிதழ்



கொழும்பு, மார்ச் 24

இந்த நாட்டின் சிறந்த தலைவர் கோத்தாபய ராஜபக்சவே தற்போதைய நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை அவர் மீட்டே தீருவார். பதவி விலகும் எண்ணம் அவருக்கு இல்லை இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைப் பதவி விலகுமாறு எதிர்க்கட்சிகளும், எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்களுமே கோருகின்றனர். ஜனாதிபதிக்கு ஆணை வழங்கிய மக்கள் எவரும் அவரைப் பதவி விலகுமாறு கோரவில்லை.

இதேவேளை - ராஜபக்ச சகோதரர்களுக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் சில ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. அந்த ஊடகங்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். உண்மைச் செய்திகளை வெளியிட்டால் அவற்றை நாம் வரவேற்போம். அதைவிடுத்துப் போலிச் செய்திகளை வெளியிட்டு மக்களைக் குழப்பவேண்டாம்.

இந்த நாட்டை முன்னேற்ற ராஜபக்ச சகோதரர்கள் ஓரணியில் பயணிக்கின்றனர். எமது பயணம் வெற்றியடைய ஆளுந்தரப்பில் உள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் - என்றார். (ம-22)

# பாவனையாளர் அதிகாரசபை தூங்கவில்லையாம்!

## யாழ். மாவட்டச் செயலர் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலையங்களில் பொருள்கள் பதுக்கல்கள், நிபந்தனைகளுக்கு பொருள்கள் விற்பனை, அதிகரித்த விலை விற்பன என்பன தொடரும் நிலையில் இது தொடர்பில் மாவட்ட நுகர்வோர் அதிகார சபை செயற்பாடுகளை முன்னெடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், பாவனையாளர் அதிகார சபையால் இரண்டு மாதங்களில் 78 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

"நிபந்தனை அடிப்படையில் பால்மா பொருள்கள் விற்பனை செய்தல், விற்பனை செய்ய மறுத்தல், விலையை மாற்றி விற்பனை செய்தல், காலாவதியான பொருள்களை விற்பனை செய்தல், விலையை வெளிக்காட்டாமை மற்றும் பொதி செய்யப்பட்ட பொருள்களின் மீது முறையான தரவுகள் வெளிக்காட்டாமை தொடர்பாகவே வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திரவ பெற்றோலியவாயு களஞ்சியசாலையில் இருப்பிலிருந்த வாயு கொள்கலன்கள் பொது மக்களின் பயன்பாட்டுக்கும் பாவனையாளர் அதிகார சபையால் விநியோகிக்கப்பட்டது. மேலும், யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபை பொதுமக்களுக்கு இயன்றளவு சேவையை வழங்க காத்திருப்பதோடு பொது மக்களிடமிருந்து பெறுமதியான முறைப்பாடுகளை எதிர்பார்க்கின்றது. பொதுமக்கள் துரித சேவை 1977, யாழ். நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை - 021 222 9001 தொலைபேசி அழைப்பினூடாக எந்நேரமும் முறைப்பாட்டை மேற்கொள்ள முடியும்" என்றும் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-26)



# எங்களிடம் ஆட்சியை தாருங்கள் சிறப்பாகச் செய்து காட்டுகிறோம்

## சபையில் சஜித் சூளுரை

கொழும்பு, மார்ச் 24

"இலங்கையின் வளங்கள் வெளிநாடுகளுக்கு ஏலமிடப்படுகின்றன, இது பயங்கரமான நிலைமையாகும். எனவே, முடியாவிட்டால் ஆட்சியை தாருங்கள். நாங்கள் செய்து காட்டுகின்றோம்" இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வெளியிட்ட கருத்துகளுக்குப் பதிலடி கொடுக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

"நாட்டு மக்கள் தவிக்கின்றனர். சமையல் எரிவாயு மற்றும் எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் எரிபொருள் இறக்குமதியிலும் கொள்ளை அடிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. அதற்கான அமைச்சரவைப் பத்திரமும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல நாட்டு வளங்களும் விற்கப்படுகின்றன. மக்கள்கூட நாளை விற்பனை செய்யப்படலாம்.

இராஜதந்திர கொடுக்கல் வாங்கல் என்பது இரு அரசுகளுக்கிடையில் இடம்பெறும் செயல். எமது ஆட்சியின்கீழ் எரிபொருள் வழங்குவதற்கு நாடுகள் முன்வந்துள்ளன என்பது உண்மை. ஆனால், இனவாத ஆட்சியை முன்னெடுக்கும் ஆட்சியுடன் அவர்கள் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடமாட்டார்கள். முடியாவிட்டால் எங்களிடம் ஆட்சியை ஒப்படையுங்கள். நாங்கள் செயலில் காட்டுகின்றோம். அரசால் முடியாது என்பதை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஏற்றுக் கொண்டுள்ளார். எங்கள் ஆட்சி விரைவில் வரும். அப்போது நிச்சயம் செய்துகாட்டுவோம்" - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களுக்கு போதுமான நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 24**

**ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் தான் எரிபொருள் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டு மக்களுக்கு இயலுமான அளவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என கைத்தொழில் வளங்கள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- சமையல் எரிவாயு, எரிபொருள் ஆகிய பிரச்சினைகள் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. முழு உலகமும் இந்தப் பிரச்சினையை தற்போது எதிர்க்கொண்டுள்ளன. எரிபொருளின் விலை பெருமளவில் அதிகரிக்கப்படவில்லை. ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் குறைந்த விலையில் தான் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசாங்கம் பொதுமக்களுக்கு இயலுமான அளவு நிவாரணங்களை வழங்கியுள்ளது. எரிபொருள் விநியோகம் குறித்து எதிர்தரப்பினர் மக்கள் மத்தியில் முன்னெடுத்த தவறான பரப்புரைகள் எரிபொருள் பற்றாக்குறைக்கு பிரதான காரணியாக உள்ளது - என்றார். (ம)

## மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியவர் இறப்பு

சாவகச்சேரி,மார்ச் 24

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, குணமாகி வீடு திரும்பியவர், நெஞ்சு வலி ஏற்பட்டு உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மிருசுவில் - தவசிகுளத்தில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 73 வயது முதியவர் சுக வீனம் காரணமாக, இரு தினங்களுக்கு முன்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் குணமாகி காலையில் வீடு திரும்பினார். எனினும் மாலையில் நெஞ்சுவலி ஏற்பட மருத்துவமனைக்குக்கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். (ஒ-4,9)

## எரிபொருளில்லை வாடும் பயிர்கள்

சாவகச்சேரி,மார்ச் 24

எரிபொருள் தட்டுப்பாட்டால் மேட்டு நிலப் பயிர்ச் செய்கை மற்றும் விவசாயப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டது என்று தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், பயிர்களுக்கு நீர் இறைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால் பயிர்கள், வாடி அழிவடைகின்றன. தோட்ட நிலங்களில் மின்சார வசதி இல்லாமையால் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பயிர்களுக்கு நீர் பாய்ச்சப் படுகின்றது. எனினும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் அனைத்து பயிர்களுக்கும் நீர் பாய்ச்ச முடியவில்லை என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-4,9)

## அவுஸ்திரேலியாவிடமும் கையேந்தும் இலங்கை

கொழும்பு.மார்ச் 24

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து, அவுஸ்திரேலியாவிடம் கடன் கோரப்பட்டுள்ளது. பால்மா, பருப்பு மற்றும் உணவு உற்பத்திக்காக இந்தக் கடன் கோரப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் கோரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தியா மற்றும் சீனாவிடம் கடன் கோரப்பட்டுள்ள நிலையில், இந்தியாவிடமிருந்து முதற்கட்ட கடன் உதவி கிடைக்கப் பெற்றுள்ளது. சீனா, இலங்கை கோரிய் கடன் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4,இ)

## சீனாவிடம் கோரப்படும் கடன்: செலவுப் பட்டியல் வெளியீடு

சீனாவிடம் கோரப்பட்டுள்ள 2.5 பில்லியன் டொலர் கடன் எதற்காக பயன்படுத்தப்படும் என்ற விவரத்தை நிதி அமைச்சு வெளியிட்டுள்ளது. குறித்த கடனில், 1.5 பில்லியன் டொலர் மருந்துகள், அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் கைத்தொழிலுக்கான மூலபொருள்கள் என்பவற்றின் இறக்குமதிக்காகவும், ஒரு பில்லியன் டொலர் கடன் வெளிநாட்டு ஒதுக்க விரிவாக்கத்துக்காகவும் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்று நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்துள்ளார். (ஒ-4,இ)

## தரம் 5 புலமைப்பரீட்சைப் பெறுபேறுகள்: தென்மராட்சி வலயம் வடக்கில் முதலிடம்

சாவகச்சேரி,மார்ச் 24

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம், தென்மராட்சிக் கல்வி வலயம் விகிதாசார அடிப்படையில் வடமாகாணத்தில் முதலிடம் பெற்றுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய 978 மாணவர்களில் 860 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளனர். இவர்களில் 192 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்றுள்ளனர்.

விகிதாசார அடிப்படையில் தென்மராட்சி வலயம் 87.93 புள்ளிகளுடன் முதலிடத்தையும், யாழ்ப்பாணம் கல்வி வலயம் 86.83 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும் [illegible] கல்வி வலயம் [illegible] புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் கல்வி வலயம் முதலிடத்தையும், தென்மராட்சிக் கல்வி வலயம் இரண்டாமிடத்மையும், வடமராட்சிக் கல்வி வலயம் மூன்றாமி [illegible] (ஒ-4,9)



## புதினம் தெரியுமோ?

**சொ**ன்ன நேரத்தைவிட பிந்தி வாறதெண்டது எங்கட ஆக்களின்ர பிறவிக்குணம். அதுக்கு அமைச்சர்மாரும் விதிவிலக்கில்லைத்தானே. கிட்டடியில வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன யாழ்ப்பாணத்துக்கு வந்து சதொசவுக்கு போய், அங்க என்னென்ன இருக்கெண்டு பார்த்து, திணைக்களங்களில் கூட்டங்கள் எல்லாம் வைச்சு, 'கெதியிலை எல்லாச் சாமானும் வருகுது. விலை குறையுது' எண்டு படம் காட்டிட்டுப் போனவரெல்லோ. அப்பிடி அவர் வைச்ச கூட்டங்களில் ஒண்டு யாழ்ப்பாணக் கச்சேரியிலையும் நடந்தது.

9 மணிக்கு கூட்டம் எண்டு அறிவிச்சு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில இருந்தெல்லாம் பெரிய அதிகாரிமார் வந்து வெயிட் பண்ணுகினம். ஆனால் அமைச்சர் வர லேட். கிட்டத்தட்ட ஒண்டே முக்கால் மணித்தியாலம் அதிகாரிமார் வெயிட் பண்ணி களைச்சுப் போன நேரத்திலதான், 10.45 போல அமைச்சர் வந்திருக்கிறார். வந்தவர் ஒரு 'சொறி' கூட கேக்காமல் கூட்டத்தை நடத்தத் தொடங்கிட்டார். ஏதோ பிந்தி வாறதுதான் சரியான பாரம்பரியம் எண்டு நினைச்சாரோ, இல்லாட்டி 'நான் அமைச்சர் எப்பவும் வருவன், அதிகாரியள்தான் வெயிட் பண்ணவேணும்' எண்ட மண்டைக்கனமோ தெரியேலை. அப்பிடி பிந்தி தொடங்கின மீட்டிங்கிலையும் உருப்படியான தீர்மானமொண்டும் எடுக்கேலை. சும்மா ஒப்புக்குச் சப்பாணியா 'நானும் கூட்டம் வைச்சன்' எண்டதுக்காக நடந்த மீட்டிங்தான் அது.

இப்பிடி அவசியமில்லாத மீட்டிங்கை 'சூமில' வைச்சிருக்கலாம். அரச அலுவலர்மார் எல்லாரும் எரிபொருளை சிக்கனமா பாவிக்கோணும் எண்டு 'சேக்கிளர்' கூட வந்திருக்கு. ஆனால் இந்த உப்புச்சப்பில்லாத கூட்டத்துக்காக கிளிநொச்சியில இருந்து 4 பிரதேச செயலர்மாரும், யாழ்ப்பாணத்தில இருந்து 15 பிரதேச செயலர்களும், அதைவிட கிளிநொச்சி அரசாங்க அதிபரும் எண்டு கிட்டத்தட்ட 20 பேரும் தனித்தனி வாகனங்களில் இந்த ஒண்டுக்கும் உதவாத கூட்டத்துக்காக வந்திருக்கினம். எரிபொருளும் அநியாயம், நேரமும் அநியாயம். அதைவிட பேசாமல் சூமில இந்த மீட்டிங்கை வைச்சிருந்திருக்கலாம். எரிபொருளை சிக்கனமா பாவியுங்கோ எண்டு 'சேக்கிளர்' அனுப்பினால் மட்டும் பத்தாது. அதுக்கேத்தபடி உத்தரவு போடுற அமைச்சர்மாரும் நடக்க வேணுமெல்லோ. இப்பிடி ஒரு கூட்டத்தைக்கூட சிக்கனமா பாவிக்கத் தெரியாமல், அநியாயமாக்கிற இதே அமைச்சர் பந்துலதான் 'இலங்கையில உள்ள குடும்பங்கள் சிக்கனமா வாழ்ந்தால் அவைக்கு ஒரு மாசத்துக்கு ஐயாயிரம் ரூபா காணும்' எண்டு சொன்ன ஆள். நல்லா வாழ்வார் பாருங்கோ!



- பட்சி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி மத்திய கல்லூரியில் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 24
அச்சுவேலி மத்திய கல்லூரிக்குள் நுழைந்த திருடர்
கள், அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கணினி
யைத் திருடிச் சென்றுள்ளனர்.
இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று மாலை 3 மணிக்
கும் 4 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மின்சாரம்
தடைப்பட்டிருந்தபோது நடந்துள்ளது என்றும், மண்
வெட்டி, இரும்புக் கம்பி என்பவற்றைக் கொண்டு அலு
வலகக் கதவை உடைத்து, உள்ளே இருந்த கணினி
யைத் திருடிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்
படுகின்றது.
மாலை பாடசாலைக்குச் சென்ற அதிபர், கதவு உடைக்
கப்பட்டிருப்பதை அவதானித்து அச்சுவேலி பொலிஸ்
நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை
களை முன்னெடுத்துள்ளனர். (எ-23)

## சிற்றுண்டி நிலையங்களில்

# விலைப்பட்டியல் மாயம்; பொதுமக்கள் சிரமம்

சாவகச்சேரி மார்ச் 24
யாழ்.மாவட்டத்தில் உள்ள சிற்றுண்டி நிலையங்
களில் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகளின் விலைப்
பட்டியல் திடீரென மறைக்கப்பட்டதால் மக்கள்
பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
சிற்றுண்டி தயாரிப்பதற்கான பொருள்களின்
விலைகள் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்
றன. இதனால், சிற்றுண்டிகளை கடைகளுக்கு
வழங்குவோர் விலையை அதிகரித்து வழங்குவ
தால் விலைப்பட்டியலில் உள்ளவாறு சிற்றுண்டி
களை வழங்க முடியாத நிலையில் பட்டியலை
மறைத்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.
இதேவேளை சீனியின் விலை அதிகரித்து வருவ
தால் தேநீர் உள்ளிட்டவற்றின் விலைகளும் அதி
கரிக்கப்பட்டுள்ளன. (ய-9)



# யாழ். பஸ்நிலையத்தில் நேற்று சிவில் அமைப்புகள் போராட்டம்

**யாழ்ப்பாணம், மார்ச் 24**
**காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி, காணி விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, பல்வேறுபட்ட சிவில் அமைப்பினர் இணைந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தின் முன்பாக நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

கையில் ஒப்படைத்த
உறவுகள் எங்கே!, எம்
சொந்த மண் வேண்
டும்!, ஆக்கிரமிக்காதே,
ஆக்கிரமிக்காதே எமது
சொந்த நிலங்களை
ஆக்கிரமிக்காதே, இந்
திய இழுவைப் படகின்
வருகையை முற்றாகத்
தடுத்து நிறுத்து போன்ற
பதாகைகளைத் தாங்கி,
கோஷங்களை எழுப்பிப்
போராட்டத்தில் ஈடுபட்ட
னர்.
தொடர்ந்து பேரணியாக
கோஷங்களை எழுப்
பிய வண்ணம் மருத்துவ
மனை வீதியூடாக ஆளு
நர் அலுவலகத்தைச்
சென்றடைந்தனர்.
அங்கு மனுவைக் கைய
ளித்தனர்.
தேசிய மீனவர் ஒத்து
ழைப்பு இயக்கத்தின்
ஏற்பாட்டில் இடம்பெற்ற
போராட்டத்தில் பிரஜா
அபிலாஷ வலைய
மைப்பு, வடமாகாண
கடற்றொழிலாளர்
இணையம், கிராமிய
உழைப்பாளர் சங்கம்,
பூந்தளிர் பெண்கள்
அமைப்புஉள்ளிட்ட
அமைப்புகள் கலந்து
கொண்டனர்.
(ஒ-4-26-125)

# வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் காட்சிப்படுத்தல்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திலி
ருந்து கடந்த 15 ஆம் திகதி யாழ்ப்பாண மோட்டார்
போக்குவரத்துத் திணைக்கள காரியாலயத்துக்குக்
கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டி
யல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசசெ
யலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட
மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தி
லும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப்பல
கையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் https://
dmtappointiments.dmt.gov.lk என்ற இணையத்தளத்
தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 0212117116 என்ற
தன்னியக்க தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு
கொள்வதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்ப
திவு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## மரண அறிவித்தல்

தோற்றம்
07
.
10
.
1943



மறைவு
23
.
03
.
2022

### திரவியம் இரத்தினம்

யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம்
இரத்தினம் நேற்று (23.03.2022) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற திரவியம், வன்னியர் றோசமுத்து தம்பதியரின் அன்பு
மகனும், லில்லி அக்னஸ் (தாத்தி) அவர்களின் பாசமிகு கணவரும், ஏபன்,
லைபனன், பெகின், ஜறின், ஜெனின், எழின் ஆகியோரின் அன்புத் தந்தையும்,
நீலாம்பரி, ரேக்கா, அனு, கவிதா, ஜெறாம் ஆகியோரின் அன்பு மாமனாரும்
ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (25.03.2022) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00
மணியளவில் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்பு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம்
செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 077 0062 993

தகவல்:
குடும்பத்தினர்.

# தஞ்சம் கோரிச் சென்றோர் மண்டபம் அகதி முகாமில்



மன்னார், மார்ச் 24
தலைமன்னாரில் இருந்து படகுமூலம்
தமிழகத்துக்குச் சென்ற 16 பேரில், 10
பேரை மண்டபம் இலங்கைத் தமிழர்
அகதிகள் முகாமில் தங்க வைக்குமாறு
இராமேஸ்வரம் நீதிமன்றம் நேற்று உத்
தரவிட்டது.
தலைமன்னாரில் இருந்து இரு குடும்
பங்களைச் சேர்ந்த 16 பேர் நேற்றுமுன்
தினம் படகுமூலம் தமிழகம் சென்றிருந்
தனர். இலங்கையில் நிலவும் பொருளா
தார நெருக்கடி காரணமாகவே அவர்கள்
தமிழகத்தில் தஞ்சமடைந்தனர் என்று
விசாரணைகளில் தெரிவித்திருந்தனர்.
நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு பட
கில் சென்ற 6 பேர் மண்டபம் இலங்
கைத் தமிழர் அகதிகள் முகாமுக்கு
மாற்றப்பட்டிருந்த நிலையில், நேற்று
இரவு மேலும் 10 பேர் படகு மூலம் தமிழ
கம் சென்றிருந்தனர். அவர்கள் நேற்று
நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது
அவர்களையும் அகதிகள் முகாமுக்கு
மாற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.
(எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் விழிப்புணர்வுதான் நீர்வளத்தைப் பாதுகாக்கும்!

## புவியியல் விரிவுரையாளர் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 24

**தண்ணீர் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தினாலே, நிலைத்து நிற்கக்கூடிய நீர்வளத்தை வடக்கு மாகாண மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையின் முதுநிலை விரிவுரையாளரான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.**

உலக தண்ணீர் தினமான நேற்றுமுன்தினம் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

வடக்கு மாகாண தண்ணீர்த் தேவையைப் பொறுத்தவரையில் இரு வேறுபட்ட மூலாதாரங்களில் தங்கியுள்ளோம். பெரும்பாலான தண்ணீர்த் தேவைகள் அனைத்துமே 72 வீதம் தரைக்கீழ் தண்ணீரால்தான் பூர்த்தி செய்யப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற மக்களில் 88 வீதமானவர்கள் பெரும்பாலும் தங்களுடைய கிணறுகளில் அல்லது தங்களுடைய பிரதேசங்களில் இருக்கின்ற தரைக்கீழ் தண்ணீரை நம்பியே தங்களுடைய தேவைகளை நிறைவு செய்கின்றனர். நெற்செய்கை நடவடிக்கைகள், கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு மேற்பரப்பு நீர்நிலைகளான ஆறுகள், குளங்கள், குட்டைகள் போன்றவற்றை நம்பியுள்ளனர். வடக்கு மாகாணத்தில் அண்மைய ஆண்டுகளில் பூகோளரீதியில் ஏற்படுத்தப்பட்ட காலநிலை மாற்றத்தால் தண்ணீரின் தன்மை மாசடைகின்றது.

போருக்குப் பின்னர் பல்வேறு வகைப்பட்ட கட்டுமானம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் விளைவாக தண்ணீர் மிகக் கணிசமானளவு பயன்படுத்தப்படுகின்றது. நவீன முறைகளைப் பயன்படுத்தி தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தண்ணீரை மீள் நிரப்புகின்ற அளவில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் அதிக அளவான தண்ணீரைப் பயன்படுத்துவதன் காரணமாக, ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பெருமளவான பகுதிகள் தண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்ற சூழ்நிலையைக் காணலாம்.

வடக்கு மாகாணத்தின் பிரதான நிலப்பகுதியில் காணப்படுகின்ற நீர்ப்பாசனக் கால்வாய்களும், முறையான வடிகால் அமைப்புச் செயற்பாடுகளின் பராமரிப்புக்கு உட்படுத்தப்படவில்லை. ஆகவே சரியான வடிகால் அமைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம், வடிகால்களூடாக தண்ணீர் வீண்விரயமாவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். பெரும்பாலான மக்கள் தண்ணீரை வீண் விரயம் செய்கின்றனர், தவறாகப் பயன்படுத்துகின்றனர். தேவைக்கு மேலதிகமாக பயன்படுத்துகின்றனர். பொருத்தமற்ற காலப் பகுதியில் பயன்படுத்துகின்றனர். ஆகவே இது போன்ற செயற்பாடுகளைத் தவிர்த்து தண்ணீர் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்வது தற்காலத்தில் மிகமிக அவசியமானது - என்றார். (ம-4,110)

## 158ஆவது பொலிஸ்வீரர் தினம் பல இடங்களில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

158ஆவது பொலிஸ்வீரர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா உட்பட பல்வேறு இடங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையில் அமைந்துள்ள வடமாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபரின் அலுவலகம், யாழ். பிரதான பொலிஸ் நிலையம் உள்ளிட்ட 9 பிரதேச பொலிஸ் நிலையங்களிலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் என்.பி.விஜித் லியனேகே மற்றும் யாழ். பிரதான பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் ஆ.சமிந்த பலிகேன உள்ளிட்ட பதவி நிலைப் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வவுனியா பொலிஸ் தலைமையகத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.வி.மல்வலகே தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பொலிஸ் அணிவகுப்பு இடம்பெற்றதுடன், உயிரிழந்த பொலிஸாரை நினைவுகூர்ந்து பொலிஸ் கொடியும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-4-23-27-110)



## நோர்வேப் பிரதிநிதிகள் பயநர்களுடன் சந்திப்பு

கிளிநொச்சி, மார்ச் 24

பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேசத்தில் பொருண்மியம் நலிந்த மக்களுக்கு நோர்வே நாட்டின் வீ.ஜீ.எஸ். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களால் சேகரிக்கப்பட்ட நிதி போரூட் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த நிலையில், அந்த உதவித் திட்டம் தொடர்பான மற்றொரு மக்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வழங்கப்பட்ட நிதியால் மக்கள் பயனடைந்துள்ளனரா என்பதைப் பார்வையிடும் வகையிலும் அடுத்தகட்ட உதவிகளை வழங்கும் வகையிலுமே நோர்வே நாட்டுப்பிரதிநிதிகள் பயனாளிகளின் வீடுகளுக்கு நேரில் சென்று அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். (ம-14,9)

## விபத்தில் இளைஞன் படுகாயம்

சாவகச்சேரி, மார்ச் 24

ஓட்டோவும், மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்தான். இந்த விபத்து மீசாலை வடக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றது. கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். (ம-4,9)



## சட்டவிரோதச் செயல்கள் தொடர்புடையோர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 24

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

15 லீற்றர் கசிப்பை மோட்டார் சைக்கிளின் மூலம் வேறொரு பகுதிக்குக் கொண்டுசென்ற இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது.

அதேவேளை, சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் ஒருவரின் சங்கிலியை அறுத்து தப்பிச் செல்ல முற்பட்டவர் கைது செய்யப்பட்டார். அவர் சங்கிலியை விழுங்கியதை அடுத்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவரிடமிருந்து சங்கிலி மீட்கப்பட்டது.

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அதேவேளை மோட்டார் சைக்கிளைத் திருடி, காட்டுக்குள் மறைத்து வைத்திருந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கல்லாற்று பாடசாலையில் நீர் இறைக்கும் பம்பி திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது. சந்தேக நபரிடம் இருந்து 3 தண்ணீர் பம்பிகளையும் பொலிஸார் மீட்டனர்.

வாகன அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய சந்தேகநபர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-4.113)

## புத்தரிசி விழாவுக்கு அரிசி வழங்கல்

வவுனியா, மார்ச் 24

55ஆவது தேசிய புத்தரிசி விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி அக்ர சாஸ்ய ஜெயஸ்ரீ மகா போதியில் இடம்பெறவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு கமநல சேவை நிலையங்களில் அரிசி வழங்கும் விழா வவுனியா கோவில்குளம் கமநல சேவை நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.



இதன்போது நான்கு மதகுருமார்களால் புத்தரிசி வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்குவதற்கான செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மாவட்டச் செயலர் சரத்சந்திர மற்றும் விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்பின் முதகீயஸ்தர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-14,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு முண்டுகொடுக்காது உடனடியாக வெளியேறுங்கள்

## சுதந்திரக் கட்சிக்கு விமல் ஆலோசனை



கொழும்பு, மார்ச் 24

**ராஜபக்ச அரசாங்கம் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. இந்த அரசாங்கத்துக்கு சுதந்திரக் கட்சியினர் இனியும் முண்டு கொடுக்காமல் தீர்க்கமான முடிவெடுத்து வெளியேறவேண்டும் என்று முன்னாள் அமைச்சரும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாமும் பொறுமை காத்து அரசாங்கத்துக்கு முண்டுகொடுத்து வந்தோம். இறுதியில் எமது அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி பிடுங்கி எடுத்தார். தற்போது அமைச்சர்கள் தாமாகவே பதவியிலிருந்து விலக ஆரம்பித்துள்ளனர். மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக்கட்சியினரைச்சமாளிக்கவே சர்வகட்சி மாநாட்டை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நடத்துகின்றார். இதைப் புரிந்துகொண்டு எதிர்க்கட்சிகளும் மாநாட்டைப் புறக்கணித்துள்ளன. எமது கட்சியும் மாநாட்டுக்குச் செல்லாது. சுதந்திரக் கட்சியுடனோ அல்லது வேறு எந்தக் கட்சியுடனோ கூட்டுச் சேர்வது தொடர்பில் நாம் இன்னமும் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை. நாம் தற்போது மக்கள் பக்கம் நின்றே செயற்படுகின்றோம்-என்றார். (ம-4-22)



# ரூ.20 நாணயங்கள் வெளியிடப்பட்டன

கொழும்பு, மார்ச் 24

நாட்டின் முதலாவது சனத்தொகை மற்றும் கணக்கெடுப்பினதும் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினதும் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 20 ரூபா மதிப்புள்ள இரு புதிய நினைவு நாணயங்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டன.

கொழும்புப் பல்கலை கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சந்திரிகா எஸ். விஜேரத்ன, தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி. அனுரகுமார ஆகியோர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நினைவு நாணயங்களை வழங்கினர்.

இதன்போது மத்தியவங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், பிரதி ஆளுநர் என்.டி.ஜி.ஆர். தம்மிக நாணயக்கார, நிதி அதிகாரி கே.எம். அபேகோன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-14)

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு மக்கள் நடிகர் விருது



கொழும்பு, மார்ச் 24

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல சினிமா கலைஞருமான ரஞ்சன் ராமநாயக்க மக்கள் நடிகருக்கான விருதை வென்றுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற 2022ஆம் ஆண்டுக்கான சிலிம் கன்தெர் விருது வழங்கும் விழாவிலேயே அவருக்கு இந்த விருது கிடைத்தது. (ய-இ)

# சிறைச்சாலைக் கைதிகளுக்கு உணவு விநியோகம் சிக்கலில்

கொழும்பு, மார்ச் 24

தற்போதைய பொருளாதார நெருக்கடியில், சிறைச்சாலைக் கைதிகளுக்கு உணவு விநியோகிப்பதில் பெரும் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

கைதிகளுக்கு வழங்கப்படும் உணவின் விலையை அதிகரிக்குமாறு உணவு வழங்குநர்கள் ஏற்கனவே சிறைச்சாலை பிரதானிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

தற்போது பொருள்களின் விலை உயர்வால், உணவின் விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. கைதிகள் ஒவ்வொருவருக்கும் உணவு மற்றும் பானத்துக்கு தினசரி கொடுப்பனவு 300 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4-இ)

# சமூக செயற்பாட்டாளர் மீது சட்டவிரோதக் குழு தாக்குதல்

கிளிநொச்சி, மார்ச் 24

சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராகச் செயற்பட்ட சமூக செயற்பாட்டாளர் மீது இராணுவச் சோதனைச் சாவடிக்கருகில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தருமபுரம் உழவனூர் பிரதேசத்தில் நடந்துள்ளது.

சம்பவத்தில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரும், அவரது உறவினரும் தாக்கப்பட்டுள்ளனர். அவரது முச்சக்கர வண்டியை அடித்துச் சேதமாக்கியுள்ளனர்.

உழவனூர், கல்லாறுப் பகுதிகளில் தொடர்ச்சியாகக் கட்டுப்பாடின்றி சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதற்கு எதிராக தாக்குதலுக்குள்ளான சமூக செயற்பாட்டாளர் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்துள்ளார். பல இடங்களில் முறைப்பாடும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் குறித்த சமூக செயற்பாட்டாளர் மீது கடந்த சனிக்கிழமை மதியம் ஏழு பேர் கொண்ட குழுவினர், சுண்டிக்குளம்- கல்லாறு வீதியில் இராணுவச் சோதனைச் சாவடிக்கருகில் வைத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-4-214)

# சஜித்தின் பேரணியில் மயங்கிய பெண் சாவு!

ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொண்ட பெண் ஒருவர் உயிரிழந்தார்.

பதுரலிய கம்புராவல பிரதேசத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஏற்பாட்டில் மக்கள் பேரணி இடம்பெற்றது.

இதில் கலந்து கொள்வதற்காக ஊர்வலமாகச் சென்ற வயோதிபப் பெண் ஒருவர் திடீரென விழுந்து உயிரிழந்தார் என்று பதுரலிய பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் வலல்லாவிட்ட யகிரல பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டார். பதுரலிய, போகஹா சந்தியிலிருந்து பேரணி நடைபெறும் இடத்துக்கு ஊர்வலமாகச் சென்ற இந்தப் பெண், கம்புரவல பாடசாலைக்கு முன்பாக உள்ள வீதியில் விழுந்து உயிரிழந்தார் என்று பதுரலிய பொலிஸ் பொறுப்பதிகாரி தில்ருக் கொலம்பகே தெரிவித்தார்.

1990 சுவசரிய அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு, அந்தப் பெண் பதுரலிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இந்த வயோதிபப் பெண் சுகவீனம் காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும், அதற்கான மருந்துச் சீட்டுகள் அவரிடம் இருந்தன என்றும் பதுரலிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-இ)

# 13 மணித்தியாலங்கள் நீந்தி மாற்றாற்றல் சிறுமி சாதனை

தலைமன்னாரில் இருந்து அரிச்சல்முனை வரை 13 மணித்தியாலங்களில் கடலில் நீந்தி, முதன்முதலில் சாதனை படைத்துள்ளார் மாற்றுத்திறனாளியான மும்பையைச் சேர்ந்த ஜியா ராய் என்ற 13 வயதுச் சிறுமி.

இலங்கை-இந்தியாவின் நட்புறவை மேம்படுத்தும் நோக்கத்தோடு மேற்படி சிறுமி, கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைமன்னாரில் இருந்து 28.5 கிலோமீற்றர் தொலைவை 13 மணித்தியாலங்களில் நீந்தி தனுஷ்கோடியை அடுத்துள்ள அரிசல்முனைப்பகுதியைச் சென்றடைந்துள்ளார். (ம-4-60)



மண்டைதீவுப் பகுதியில் சர்வதேச வனாந்தரங்கள் தினத்தினை முன்னிட்டு 'வனவளங்களை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் திண்மக்கழிவுகள் அகற்றும் செயற்பாடு யாழ். மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்களத்தின் வட்டார வன அதிகாரி டி.எம் டி.ஆர். கருணாநாயக்க தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது மண்டைதீவு கண்டல் தாவரங்களுக்கிடையில் இருந்த திண்மக்கழிவுகள் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினருடன் இணைந்து கடற்படையினரால் அகற்றப்பட்டன. (ய-125)

# நிலையியல் குழுவுக்கு மேலதிக உறுப்பினர்கள்

கொழும்பு, மார்ச் 24

சிசிர ஜயகொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டவரைவை பரிசீலிப்பதற்கு, சட்டவாக்க நிலையியல் குழுவுக்கு மேலதிக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்று சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹேஷா விதானகே, வருண லியனகே, கிங்ஸ் நெல்சன், அனுப பஸ்குவல், சுதத் மஞ்சுல, வசந்த யாப்பாபண்டார, பீ.வை.ஜி. ரத்னசேக்கர மற்றும் லலித் வர்ணகுமார ஆகியோர் சட்டவாக்க நிலையியல் குழுவில் சேவையாற்றுவதற்காக மேலதிக உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அகதிகள் தொடர்கதை!

அன்றாட விலையேற்றங்களைச் சமாளித்து, இலங்கையில் இனியும் வாழமுடியாது என்ற கட்டத்தில் பதினாறு பேர் உயிராபத்து மிக்க கடற்பயணத்தைத் தாண்டி அகதிகளாக இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். பொருளாதாரத்தைக் காரணமாகக் காட்டி ஒரு மக்கள் கூட்டம் தன்னை அகதி என்று அடையாளப்படுத்தும் 'அரிதான' நிகழ்வாக இது அமைந்திருக்கின்றது.

அகதிகள் உருவாக்கம் இலங்கைக்குப் புதிதல்ல. இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடர்ந்த போரால், லட்சக்கணக்கான இலங்கையர்கள் இந்தியாவிலும், மேற்குநாடுகளிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளார்கள். பலஸ்தீனம், உக்ரைன் நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள அகதிகள் பெருக்கமும் சரி, மியான்மர், லிபியா, ஏமன், சூடான், எத்தியோப்பியா, சிரியா, ஈராக் நாடுகளில் ஏற்பட்ட அகதிகள் பெருக்கமும் சரி, அனைத்தும் ஆயுத ரீதியிலான போரை மையப்படுத்தியதாகத்தான் அமைந்திருந்தன. ஆனால், ஆயுதப்போரை மையப்படுத்தியதாக மட்டுமல்ல பொருளாதாரப் போரையும் மையப்படுத்தியதாக அகதிகள் உருவாக்கம் இருக்கலாம் என்பதை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றது 'ஆசியாவின் ஆச்சரியம்'.

இலங்கையில் பொருள்களின் விலையேற்றம் கட்டுக்கடங்காமல் எகிறிக்கொண்டு செல்கின்றது. கடந்த வாரம் இருந்த விலைகள் இந்த வாரம் இரட்டிப்பாகியுள்ளன. இந்த வாரம் இருக்கும் விலைகள் அடுத்த வாரம் இன்னும் அதிகரிக்கவே செய்யும் என்பதே இங்குள்ள 'புதிய வழமை'. இந்த யதார்த்த முரண் நிலையால் பதுக்கல்களும் தாராளமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று விற்க வேண்டிய பொருளை அடுத்த வாரம் விற்றால் இலாபம் அதிகரிக்கும் என்று விற்பவன் சிந்திக்கின்றான். அடுத்த வாரம் வாங்க வேண்டிய பொருளை இந்த வாரம் வாங்கிவிட்டால் கொஞ்சம் பணத்தைச் சேமிக்கலாம் என்று வாங்குபவன் சிந்திக்கின்றான். இது கடைகளிலும் வீடுகளிலும் இடம்பெறும் பதுக்கல்களை நியாயப்படுத்தும் கருத்தல்ல. ஆனால், பொருள்களுக்கு விலைகளை நிர்ணயிக்காமல் நாளுக்கொரு விலையேற்றமாக இருந்தால் பதுக்கல்களுக்கும் பஞ்சம் இருக்காது என்பதே யதார்த்தம். மனித இயல்பும் அதுவே.


இத்தகைய முரண் நிர்வாகங்களால்தான் கேள்வி அதிகரித்து பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் விலையேற்றங்கள் கட்டுக்கடங்காமல் போகின்றன. விலையேற்றங்கள் நேராகக் குறிவைப்பது அப்பாவி மக்களையேயன்றி மாறாக வினைத்திறனற்ற நிர்வாகிகளையோ, விற்பனை, கொள்வனவின் பெயரில் செயற்கைத் தட்டுப்பாட்டை வலிந்து ஏற்படுத்தும் பதுக்கல்காரர்களையோ அல்ல. இந்த நிலைமைதான் இன்று உயிராபத்து மிக்க கடற்பயணங்களைத் தாண்டி தம் தேசத்தைவிட்டு அகதிகளாக 16 பேர் தமிழகத்தைச் சென்றடையக் காரணமாகியிருக்கின்றது.

இது இத்துடன் முடிந்துவிடப்போகும் விடயமல்ல. இந்த ஆபத்தான கடற்பயணங்கள் மேலும் அதிகரிக்க முன்னர், வாழ்வதை விட இறப்பதே மேல் என்ற நிலைக்கு அப்பாவிக் குடும்பங்கள் வருவதற்கு முன்னர், கொஞ்சமாவது அவர்களின் சுமைகளைக் குறைக்க ஆக்கபூர்வமான பொறிமுறைகளை அரசாங்கம் உருவாக்கவேண்டும். விலையேற்றங்கள் மற்றும் உணவுத் தட்டுப்பாடுகள் காரணமாக, தன் பூர்வீக மண்ணைவிட்டு, வாழ்விடத்தை விட்டு, உற்றார் உறவினர்களை விட்டு உயிரைப் பணயம் வைத்து அகதிகளாக இன்னொரு நாட்டுக்குச் செல்வது எவ்வளவு பெரிய அபத்தம் – பின்னடைவு – அவமானம். ஏழு மூளை கொண்டவர்கள் கொஞ்சமேனும் இதனைச் சிந்திப்பார்களா?

### நாளொரு நல்வார்த்தை

"நான் மற்றவர்களால் விரும்பப்படுபவராக இருக்க விரும்பவில்லை, நான் மற்றவர்களால் மதிக்கப்படுபவராக இருக்க விரும்புகிறேன்".

- ஜாக் மா




இந்திய நிதியைப் பயன்படுத்தி

# பெரமுனவின் முகவர்களூடாக பொதுமக்களுக்கு நிவாரணம்!

## தோலுரிக்கின்றார் சஜித்

**கொழும்பு, மார்ச் 24**

**நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கும் ஒரு பில்லியன் டொலர் கடன் தொகையைப் பயன்படுத்தி, அரசாங்கம் பெரமுனவின் ஆதரவாளர்கள் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்கத் திட்டமிட்டுள்ளது - என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேதமாஸ.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் நிலைமையை கருத்திற்கொண்டு இந்திய அரசாங்கம் ஒரு பில்லியன் டொலர் கடன் வழங்கத் தீர்மானித்திருக்கின்றது. இந்தப் பணத்தைப் பயன்படுத்தி 14 ஆயிரம் கிராமசேவகர் பிரிவுகளை அடிப்படையாக் கொண்டு, வீட்டுக்கடை என வேலைத்திட்டம் அமைத்து அவற்றுக்கு 8 லட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுன ஆதரவாளர்களுக்கும், பெரமுனவின் முகவர்கள் ஊடாக பொதுமக்களுக்கும் 2 ஆயிரம் ரூபா கூப்பன் அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தேர்தல் ஒன்றுக்கான முயற்சி. இதற்காக அரசாங்கம் வெட்கப்படவேண்டும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் வரிசை யுகத்தினால் மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். இந்த நெருக்கடி அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டதாகும். அதனால் இந்திய அரசாங்கம் வழங்கியிருக்கும் கடன் தொகை மூலம் அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து வேலைத்திட்டங்களின் அறிக்கைகளை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் - என்றார். (ம)

# நாட்டின் தேசிய வளங்களை தாரைவார்க்க அனுமதியோம்

## குணவன்ச தேரர் தெரிவித்தார்

கொழும்பு, மார்ச் 24

சொற்பத் தொகை பணத்துக்காக வடக்கு - கிழக்கு மற்றும் நாட்டின் வேறு மாகாணங்களிலுள்ள தேசிய வளங்களை கொள்ளையிடுவதற்கு அல்லது தாரை வார்ப்பதற்கான சதிகள், திட்டங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கு தாம் தயார் என எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

எல்லே குணவன்ச தேரர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்து சமுத்திரத்தின் கடல் பாதுகாப்புத் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியா இடையே கைச்சாத்திடப்படவுள்ள 3 ஒப்பந்தங்கள் தொடர்பில் உடனடியாக மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன என்று இந்திய பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை 25.03.2022 வெள்ளிக்கிழமை பங்குனி 11

சுபநேரம் : 06.15 - 07.45
ராகுகாலம்: 10.45 - 12.15

யாழ்ப்பாண நகரப் பகுதியிலுள்ள பிரபலமான மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில், டொலரின் பெறுமதியை மிதக்க விடுவதற்கு முன்னர் இருந்த விலையும், அதன் பின்னரான விலையும்.

| பொருள்கள் | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| குத்தரிசி | ரூ.140 | ரூ. 200 (உள்ளூர்)<br>ரூ. 180 (இறக்குமதி) |
| சம்பா | ரூ.140 | ரூ. 180 (உள்ளூர்)<br>ரூ. 150 (இறக்குமதி) |
| பொன்னி | ரூ.120 | ரூ.160 |
| பச்சையரிசி | ரூ.120 | ரூ.175 |
| கோதுமை மா | ரூ.120 | ரூ.175 |
| அரிசிமா | ரூ.170 | ரூ.220 |
| சீனி | ரூ.140 | ரூ.190 |
| சர்க்கரை | ரூ.155 | ரூ.200 |
| ரின்பால் | ரூ.400 | ரூ.430 |
| தேயிலை | ரூ.800 | ரூ.900 |
| மஞ்சள் பருப்பு | ரூ.320 | ரூ.420 |
| உளுந்து | ரூ.450 | ரூ.480 |
| உளுத்தம்பருப்பு | ரூ.550 | ரூ.600 |
| பூண்டு | ரூ.380 | ரூ.480 |
| பயறு | ரூ.600 | ரூ.900 |
| கௌபி | ரூ.450 | ரூ.540 |
| கடலை | ரூ.380 | ரூ.480 |
| அவல் | ரூ.180 | ரூ.260 |
| குரக்கன் | ரூ.450 | ரூ.500 |
| துவரம்பருப்பு | ரூ.450 | ரூ.520 |
| மிளகாய்த்தூள் | ரூ.850 | ரூ.1400 |
| செத்தல்மிளகாய் | ரூ.800 | ரூ.1180 |
| மல்லி | ரூ.320 | ரூ.620 |
| புளி | ரூ.200 | ரூ.250 |
| உப்பு பைக்கெற் | ரூ.40 | ரூ.50 |
| நல்லெண்ணெய் | ரூ.750 | ரூ.1000 |
| தேங்காய் எண்ணெய் | ரூ.620 | ரூ.880 |
| மரக்கறி எண்ணெய் | ரூ.650 | ரூ.940 |
| பெரிய வெங்காயம் | ரூ.130 | ரூ.170 |
| உருளைக்கிழங்கு | ரூ.110 | ரூ.150 |
| மாஜரின் | ரூ.550 | ரூ.650 |
| பேரீச்சம்பழம் | ரூ.400 | ரூ.1100 |
| பிளம்ஸ் | ரூ.600 | ரூ.1050 |
| கஜீ | ரூ.4200 | ரூ.4500 |

| | | |
|---|---|---|
| சன்லைட் சோப் | ரூ.55 | ரூ.70 |
| சன்லைட் பவுடர் | ரூ.170 | ரூ.215 |
| பேபி சோப் | ரூ.75 | ரூ.75 |
| ஹேறம்பா சோப் | ரூ.60 | ரூ.75 |
| லக்ஸ் சோப் | ரூ.75 | ரூ.80 |
| சந்தூர் சோப் | ரூ.60 | ரூ.65 |
| லைபோய் சோப் | ரூ.55 | ரூ.75 |
| சிக்னல் | ரூ.140 | ரூ.160 |

| | | |
|---|---|---|
| முட்டை (பாம்) | ரூ.15 -ரூ.20 | ரூ.30 -ரூ.35 |
| பாண் | ரூ.80 | ரூ.120 |
| றொட்டி | ரூ.25 | ரூ.65 |
| மரக்கறிக் கொத்து | ரூ.180 | ரூ.250 |
| மரக்கறி பிறைட் றைஸ் | ரூ.180 | ரூ.300 |
| இடியப்பம் | ரூ.10 | ரூ.15 |
| பிட்டு | ரூ.120 | ரூ.160 |
| தோசை | ரூ.40 | ரூ.60 |
| மசாலா தோசை | ரூ.250 | ரூ.300 |
| இட்லி | ரூ.50 | ரூ.60 |
| மரக்கறி சாப்பாடு (சோறு) | ரூ.200 | ரூ.250 |
| பற்றீஸ் | ரூ.40 | ரூ.60 |
| றோல்ஸ் | ரூ.40 | ரூ.60 |
| மிதிவெடி (அசைவம்) | ரூ.80 | ரூ.100 |
| உளுந்துவடை | ரூ.60 | ரூ.100 |
| கடலைவடை | ரூ.50 | ரூ.80 |
| மோதகம் | ரூ.50 | ரூ.60 |
| பால்மா தேநீர் | ரூ.70 | ரூ.100 |
| தேநீர் | ரூ.30 | ரூ.50 |
| முட்டை கொத்து | ரூ.150 | ரூ.250 |
| கோழி கொத்து | ரூ.300 | ரூ.500 |
| சிக்கன் பிறைட் றைஸ் | ரூ.300 | ரூ.550 |
| மட்டன் பிறைட் றைஸ் | ரூ.300 | ரூ.700 |
| மீன் சாப்பாடு (சோறு) | ரூ.200 | ரூ.280 |
| இறைச்சி சாப்பாடு (சோறு) | ரூ.200 | ரூ.480 |
| முட்டை சாப்பாடு (சோறு) | ரூ.200 | ரூ.250 |

# வரிசைகள் தொடரும் என்பதற்கான அறிகுறியே இராணுவக் கண்காணிப்பு

**கொழும்பு,மார்ச் 24**

**எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவத்தினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளமை, எதிர்வரும் நாள்களிலும் வரிசைகள் தொடரும் என்பதற்கான அறிகுறி என்று ஐக்கிய தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவிக்கையில்;

இந்தியாவில் இருந்து பெறப்படும் கடனில் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனக் கூறிய போதிலும், பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது. எரிபொருள் நிலையங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டதன்மூலம், எரிபொருள் வரிசைகளை நிறுத்த முடியாதென்பதை அரசு சுட்டிக் காட்டியுள்ளது.

எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தற்போதைய நிலைமையில் முடியாமையா லேயே, இராணுவத்தினரைப் பயன்படுத்தியுள்ளனர். 4 உயிர்களை இழந்த பின்னரே பாதுகாப்பு வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அந்த நால்வரில் ஒரு சிலர் ஒரு கோப்பை நீரேனும் அருந்தாமல் வந்தவர்கள் - என்றார். (ஒ-4,இ)

## பிரச்சினைகளைக் கையாள எங்கும் இராணுவமயமாக்கல்

*மனித உரிமைகள் ஆர்வலர் குற்றச்சாட்டு*

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளைக் கையாள்வதற்காக ஓர் உத்தியாக அரசாங்கம் இராணுவ மயமாக்கலைப் பயன்படுத்தி வருகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், அது மனித உரிமைகள் மீறப்படுவதற்கு வழி வகுத்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்கீழ் இயங்கும் எரிபொருள் நிரப்புநிலையங்களில் இராணுவத்தினர் கண்காணிப்புப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் அறிவித்திருந்த நிலையில், இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போரின் பின்னர் ராஜபக்சவின் முன்னைய அரசாங்கத்தில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் இராணுவமயமாக்கல் தீவிரமடைந்தது. நல்லாட்சி அரசாங்கத்தின் போது அந்த இராணுவமயமாக்கல் நிலை நீக்கப்படவில்லை. அதுமாத்திரமன்றி 2019ஆம் ஆண்டின் பின்னர் இராணுவமயமாக்கல் மீண்டும் தீவிரமடைந்தது. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் பிரகாரம், சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதற்காக வர்த்தானி அறிவித்தல் ஜனாதிபதியினால் மாதாந்தம் புதுப்பித்து வெளியிடப்படுகின்றது. இந்த வர்த்தமானி அறிவித்தல் இறுதியாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிடப்பட்டது. சிறைச்சாலை நடவடிக்கைகள், போதைப்பொருள் தடுப்பு, புனர்வாழ்வளித்தல் ஆகியவற்றிலும் இராணுவமயமாக்கம் இடம்பெறுவதை அவதானிக்கமுடிவதுடன், அது உரிமைகள் மீறப்படுவதற்கும் வழிவகுத்துள்ளது - என்று அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## கடற்பாதுகாப்பு ஒப்பந்தம் நட்புறவுக்காக மட்டுமே!

*அமைச்சர் பத்திரண தெரிவிப்பு*



கொழும்பு, மார்ச் 24

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் சம்பிரதாயபூர்வமான நட்புறவைப் பேணுவதற்கும், பாதுகாப்பு தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்களை முன்னெடுப்ப தற்கும் மாத்திரமே இந்து சமுத்திரத்தின் கடல் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது. மாறாக தேசிய சொத்துக்களை விற்பதற்காக அல்ல என்று அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறான ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதாயின் அதுதொடர்பில் நிச்சயம் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும். இவை சம்பிரதாய பூர்வமாக இரு நாடுகளுக்குமிடையில் நட்புறவைப் பேணுவதற்கும், பாதுகாப்பு தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்களை முன்னெடுப்ப தற்கும் மாத்திரமே இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும். அதனை விடுத்து தேசிய சொத்துக்களை விற்பது தொடர்பில் எந்தவொரு பிரச்சினையும் இதனால் ஏற்படாது. மாறாக அவ்வாறான ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அது தொடர்பில் நாடாளுமன்றத்திற்கு நிச்சயம் அறிவிக்கப்படும் - என்றார். (ம)

# எரிபொருள் விநியோகம் தடையின்றி முன்னெடுப்பு

கொழும்பு,மார்ச் 24

மக்களுக்கு அவசியமான எரிபொருள்களை, உரியவாறு வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. தேவையான அளவு எரிபொருள்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கடந்த சில நாள்களாக அனுப்பப்பட்டுள்ளன என்று அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் நாட்டின் பல பாகங்களிலும், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால், மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலை குறைவடைந்தால், உள்நாட்டிலும் அதன் விலையைக் குறைக்கத் தயார் என்று வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் இருந்த விலையின் அடிப்படையிலேயே தற்போது விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Ideal Finance உம், Mahindra Finance உம் கைகோர்த்து Mahindra Ideal Finance என்ற புதிய அமைப்பாக உருவெடுக்கின்றன. இவ்வமைப்பு இலங்கையில் புதிய நிதித் தயாரிப்புக்களையும், சேவைகளையும் தந்து, உயரும் வாடிக்கையாளர்களை வலுவூட்டும்

பரந்த கிளை வலைப்பின்னல் | Fitch தரப்படுத்தல் AA- (நிலையான உறுதிப்பாடு) | மாறாத நம்பிக்கை மற்றும் உயர்ந்த சேவை

எமது தயாரிப்புகள்

தங்கக் கடன்கள் | தனிப்பட்ட கடன்கள் | நுகர்வோருக்கான நிலையான கடன்கள் | வாகன லீசிங்

இலங்கை – BFSI இல் மிகச்சிறந்த 10 வேலைத்தளங்களில் ஒன்றாக (GPTW, 2021)

www.mahindraifl.lk | Hotline Number: 011 7 724 724

2011 இல. 42 நிதி வர்த்தக சட்டத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றது ஓ அனுமதி இல. (042) | கூட்டிணைவு சான்றிதழ் இல. PB 4963 (திகதி – 24/1/2021)


# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மற்றவர்களின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வெளியூர், வெளி நாட்டுப் பயணங்கள் ஏற்பாடா கும். பிள்ளைகளுக்கு நல்ல நிறுவ னத்தில் வேலை கிடைக்கும்.

**இடபம்:** முன்பைவிட செலவுகள் கட்டுக்குள் இருக்கும். வீடு கட்ட நீங்கள் எதிர்பார்த்த கடன் கிடைக்கும். புகழ் கூடும். கல்வி வகையில் செலவுகள் உண்டாகும்.

**மிதுனம்:** கணவன் – மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். நடக்காது என்று நினைத்த விடயங்கள் இன்று கூடிவரும். இளைஞர்களுக்கு மகிழ்ச்சி யான சூழல் உருவாகும்.

**கடகம்:** பாதியில் நின்ற வேலைகள் இன்று முடியும். வியாபாரப் போட்டிகள் குறையும். மேலதிகாரி கனிவுடன் நடந்து கொள்வார். கவலை தீரும். பெற்றோரிடம் பணிவு தேவை. நண் பர்கள் உதவி செய்வர்.

**சிம்மம்:** நல்ல செயல்களை செய்து மகான்களின் அன்பைப் பெறுவீர். தாயா ரிடம் அன்பாக இருந்து அவரின் ஆசியைப் பெறுவீர்கள். அரசாங்க வகையில் நன்மை உண்டு. பிள்ளைகள் முன்னேறுவர்.

**கன்னி:** பிரச்சினை தீரும். பலம், பல வீனத்தை உணர்வீர்கள். குடும்பத்தில் திருமணப் பேச்சுவார்த்தை வெற்றி யடையும். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும் நண்பர்கள் தேடிவருவார்கள்.

**துலாம்:** கலைத்துறையினருக்குத் திறமையும் ஆர்வமும் வெளிப்படும். பணியில் கவனத்துடன் செயற்பட்டு இரட்டிப்பு இலாபம் பெறுவீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**விருச்சிகம்:** இளைஞர்களின் முயற்சி கள் வெற்றி பெறும். பெரியவர்களுக்கு நன்மைசெய்து அவரது ஆசியைப் பெறுவீர்கள். மனதை அரித்துக் கொண்டிருந்த கவலை மறையும்.

**தனுசு:** வார்த்தைகளை அளந்து பேசுங்கள். புது விஷயம் கற்பீர்கள். கோபத்தைக் குறைப்பது நல்லது. எதுவும் நிதானமாக நடக்கும். குழந்தை களின் வெளிநாட்டுக் கனவு நனவாகும்.

**மகரம்:** உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். நிதானமான நாள். அரசாங்க விடயங்களில் அனுகூலம் உண்டு. வழக்கு மகிழ்ச்சியான தீர்ப்பை நோக் கிச் செல்லும்.

**கும்பம்:** மனதில் புதிய பலம் வருவ தற்கான தன்னம்பிக்கை கூடும். அதிகார நிலையில் உள்ளோர் அறிமுகமானவர். கலகலப்பான நாள். சுபநிகழ்வுகளில் இருந்து வந்த தடை, தாமதங்கள் நீங்கும்.

**மீனம்:** முனைப்புடன் செயற்பட்டுச் சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளை களின் அன்பு கிடைக்கும். உடல் சோர்வு நீங்கும். பணியிடத்தில் உங்களின் பெருமையும், புகழும் பெருகும். ஆரோக் கியம் மேம்படும்.

# சீன விமான விபத்து; 132 பயணிகளும் சாவு

பீஜிங், மார்ச் 24

சீனாவின் குன்மிங் நகரிலிருந்து ஈஸ்டர்ன் எயார் லைன்ஸ்க்குச் சொந்தமான போயிங் ரக பயணிகள் விமானம் விபத்துக்குள்ளா னதில் ஒருவர் கூட உயிர்தப்பவில்லை என சீன அரசு தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை 132 பயணிகளுடன் பயணித்த குறித்த விமானம் ஊஸ் நகரை ஒட்டிய வனப்பரப்பில் வீழ்ந்து நொருங்கிய தில் விபத்துக்குள்ளாகியது. சம்பவ இடத் துக்கு விரைந்த மீட்புக் குழுவினர் விமா னத்தின் சில பாகங்களை மாத்திரமே கண்டு பிடித்துள்ளனர். பயணித்த ஒருவர்கூட இதுவரை உயிருடன் மீட்கப்படவில்லை எனவும் விமானம் தீப்பிடித்து எரிந்ததில் பயணிகள் தீயில் கருகியிருக்கலாம் என வும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் மீட்புக் குழுவினர் விமா னத்தின் கறுப்புப் பெட்டியைத் தேடிவருகின் றனர். அதனைக் கண்டெடுத்தாலேயே விபத் துக்கான காரணம் குறித்துத் தெரியவரும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஹிட்லரின் வதைமுகாம்களிலிருந்து தப்பியவர் ரஷ்யாவால் உயிரிழப்பு

ஹிட்லரின் நாஜி வதை முகாம்களிலிருந்து உயிர்தப் பியவர் ரஷ்யா படை நிகழ்த்திய குண்டுவெடிப்பில் உயி ரிழந்துள்ளார். புஷென்வால், பெர்கென் பெல்சன் உள்ளிட்ட வதை முகாம்களில் இருந்து தப்பிய முதிய வரான போரிஸ் ரோமன்சென்கோ (வயது-96) என்பவரே ரஷ்யாவின் குண்டுத்தாக்குதலில் உயிரி ழந்துள்ளார் என உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## நவால்னிக்கு 9 ஆண்டு சிறை

மொஸ்கோ, மார்ச் 24

ரஷ்ய எதிர்க்கட்சித் தலை வர் அலெக்சி நவால்னி மேலும் 9 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து [illegible] நீதிமன்றம் தீர் [illegible] கியுள்ளது.

[illegible] ஜனாதிபதி புடி [illegible] கடுமையாக [illegible] வந்தவர் அலெ [illegible] னி.

[illegible] லையில் நவ [illegible] அறக்கட்ட [illegible] ாசடி மற்று [illegible] அவமதிப்பு [illegible] 9 ஆண் [illegible] தண்டனை [illegible] ள்ளது.

# ஜி20 அமைப்பிலிருந்து ரஷ்யா நீக்கம்?

மொஸ்கோ, மார்ச் 24

ரஷ்யாவை ஜி20 அமைப்பில் இருந்து விலக்கு வதற்கான நடவடிக்கையை அமெரிக்காவும் பிற மேற்கத்திய நாடுகளும் பரிசீலித்து வரு கின்றன என சர்வதேச ஊடகம் செய்தி வெளி யிட்டுள்ளது.

காலநிலை மாற்றம், உலகப் பொருளாதாரத் தைப் பாதிக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதை நோக்கமாகக் கொண்டு ஜி20 அமைப்பு செயற்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த அமைப்பிலிருந்து ரஷ்யாவை நீக்கக்கோருவது மேற்கிலிருந்து ரஷ்யாவுக்கு எதிராக இருக்கும் பொருளாதா ரத் தடைகளை அதிகரிக்கும் எனக் கூறப்படு கிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி

## 21.3.2022 முதல் 8.10.2023 வரை



ராகு-கேது பெயர்ச்சி, வாக்கிய பஞ்சாங்கத்தின்படி எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சி ஆகிறார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும். கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து. ஜென்ம ராசியான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.

நிர்வாகத் திறமையும், அதிரடித் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றும் வல்லமையும், உதவும் குணமும், எதிரிக்கும் நல்லது செய்யும் மனோ பாவமும் கொண்ட சிம்ம ராசியினரே,

எங்கும் எப்போதும் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் வல்லவர் நீங்கள். உங்களுக்கு 21.03.2022 முதல் 08.10.2023 வரையிலும் ராகுவும், கேதுவும் இணைந்து என்ன பலன்களைத் தரப்போகிறார்கள் என்று பார்ப்போம்.

இதுவரை உங்கள் ராசிக்கு பத்தாவது வீட்டில் அமர்ந்து கொண்டு உங்களை முடக்கிப்போட்ட ராகு பகவான் இப்போது ஒன்பதாம் வீட்டில் வந்து அமர்கிறார். ஆகவே பல காரியங்களை முழுமூச்சுடன் செய்து முடிப்பீர்கள்.

சோம்பல் நீங்கும். முடியாமல் கிடப்பில் கிடந்த பல காரியங்களை இனி முழுமூச்சுடன் முடித்துக்காட்டுவீர்கள். ஒளிந்து மறைந்து வாழ்ந்த வாழ்க்கை இனி பிரகாசிக்கும். என்னதான் கடினமாக உழைத்தும் கையில் ஒரு காசுகூட தங்கவில்லையே என வருந்தினீர்களே. இனி அந்த நிலை மாறும். கையில் காசு, பணம் சேரும். அரசாங்க அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் குடிகொள்ளும். உங்களின் ஆலோசனையின்றி எதுவும் செய்யமாட்டார்கள். இதுவரையிலும் இருந்துவந்த தடைகள் அனைத்தும் நீங்கி குடும்பத்தில் சுபகாரியங்கள் கூடிவரும். குடும்ப வருமானத்தை உயர்த்த புதுவழி காண்பீர்கள். கணவன் மனைவிக்குள் நிலவிவந்த பனிப்போர் மறையும்; வசதிவாய்ப்புகள் ஆயிரம் இருந்தும் வாரிசு இல்லையே என வருந்திய அன்பர்களுக்குப் பிள்ளை வரம் கிடைக்கும்.

**21.03.2022 முதல் 22.05.2022 வரை:** சூரியனின் கார்த்திகை நட்சத்திரம் 1ம் பாதத்தில் ராகு செல்வதால், பிரபலங்களுக்கு நெருக்கமாவீர்கள். பழைய பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும். கௌரவப் பதவிகள் தேடி வரும். வருமானம் உயரும்.

**23.05.2022 முதல் 29.01.2023 வரை:** சுக்ரனின் பரணி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் வீடு, வாகனம் வாங்குவீர்கள். தாயாரின் ஆரோக்கியம் கூடும்.

**30.01.2023 முதல் 08.10.2023 வரை:** கேதுவின் அஸ்வினி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் மனக் கவலைகள், திடீர்ச் செலவுகள் வந்து செல்லும்.




**வியாபாரத்தில்:** போட்டிகள் தளரும். தொழில்நுணுக்கங்களை அறிந்து பேசுவீர்கள். புதிய சலுகைகளை அறிமுகப்படுத்தி வாடிக்கையாளர்களை இழுப்பீர்கள். பழைய பொருள்கள் விற்றுத்தீரும். அனுபவமிகுந்த வேலையாள்கள் வந்துசேருவார்கள். ஏற்றுமதி -இறக்குமதி வகைகள், உணவு, இரும்பு, கணினி உதிரிப் பாகங்கள், மருந்துப் பொருள்களால் லாபம் அதிகரிக்கும். அரசாங்க விடயங்களில் அலட்சியம் வேண்டாம்.

**உத்தியோகம்:** 10ம் வீட்டில் இருந்தபடி உத்தியோகத்தில் வேலைச் சுமையையும் வீண்பழியையும் கொடுத்து வந்த ராகு இப்போது 9ல் நுழைகிறார். அவதிப்பட்ட நிலை மாறும். அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். பதவி உயர்வு உண்டு. சிலருக்குத் தகுதிக்கேற்ற நல்ல புதிய உத்தியோகம் அமையவும் வாய்ப்பு உண்டு. கலைத்துறையினரின் படைப்புகள் பட்டிதொட்டியெங்கும் பேசப்படும்.

இதுவரை உங்களின் ராசிக்கு நான்காவது வீட்டில் அமர்ந்துகொண்டு நிம்மதியாகத் தூங்கவிடாமல் அலைக்கழித்தார் கேது. எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் அடிக்கடி சந்தேகப்பட்டுக் கொண்டீர்களே! இனி நெருக்கம் அதிகரிக்கும்.

**21.03.2022 முதல் 24.09.2022 வரை:** குருவின் விசாகம் நட்சத்திரத்தில் கேது செல்வதால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வேலை இல்லாதவர்களுக்குப் புது வேலை கிட்டும். அயல்நாட்டுப் பயணங்கள் வரும். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.

**25.09.2022 முதல் 04.06.2023 வரை:** ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில் கேது செல்வதால் அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். வீண் விமர்சனங்களைத் தவிர்க்கப் பாருங்கள். நண்பர்கள் சிலரின் துரோகங்களை நினைத்து வருந்துவீர்கள்.

**4.06.2023 முதல் 08.10.2023 வரை:** செவ்வாயின் சித்திரை நட்சத்திரத்தில் கேது செல்வதால், எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய கடன் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

# சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சுப்பிரமணிய கோட்டத்தின் முதல்வரும் அமெரிக்காவின் ஹாவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்தவருமான ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் 'யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளும் சர்வதேசத்தில் அவரது சிந்தனைப் பரவலாக்கமும்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றவுள்ளார். (ச)



யாழ்.எழுவைதீவு புனித தோமையார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி தலைவர் அ.அன்ரன் றஜீந்றாஜ் தலைமையில் கடந்த திங்கட்கிழமை முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. (ச-50)

# பொருளாதார நெருக்கடிக்கு தேசியக் கொள்கை தேவை!

## மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, மார்ச் 24

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேசியக் கொள்கையொன்றை வகுக்க வேண்டியது அவசியம் என்று மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட பல தரப்பு மாநாட்டைக் கூட்டி, நிலையான அபிவிருத்திக்கான திட்டமொன்றை வகுக்கவேண்டும்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் உற்பத்திக்கு, விவசாயத்துக்கு மற்றும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல், பொருளாதார நெருக்கடி காலத்தில் முறையற்ற நிதியீட்டல்களுக்காக அத்தியாவசியமான பொருட்களில் செயற்கையாக பற்றாக்குறையை உருவாக்கும் மோசடி வியாபாரிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், வெளிப்படையான பொருளாதாரத் திட்டத்தின் மூலம் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றத்தை அதிகரித்தல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் உள்ளிட்ட திட்டங் களும் வகுக்கப்பட வேண்டும்.

நாட்டில் புதிய முதலீடுகளை ஊக்குவித்தல், அரச கடனை மறுசீரமைத்தல், குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குதல், வீண்விரயம், ஊழல் மற்றும் வள துஷ்பிரயோகம் ஆகியவற்றைத் தடுக்கவும் நிலையான திட்டத்தை உருவாக்குதல் வேண்டும்.

எனவே கட்சி பேதமின்றி நாட்டைப் பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் அவசியம் - என்றுள்ளது. (ம-4,இ)

# அரசியல் உறுப்பினர்களின் மகளிர்தின கொண்டாட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். மாவட்ட அனைத்து உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர் ஒன்றியம் மற்றும் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனம் இணைந்து நடத்திய மகளிர் தினக் கொண்டாட்டம், யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் உள்ளூ ராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் கடமைகள் தொடர்பில் கவிதைகள், பேச்சுக்கள் நடத்தப்பட்டன. தொடர்ந்து யாழ். மாவட் டத்தில் உள்ளூராட்சி மட்டத்தில் சுயதொழில் முயற்சி மற்றும் சிறந்த சமூக சேவையாற்றிய உள்ளூ ராட்சி மன்ற பெண் உறுப்பினர்களுக்கான கௌரவிப்பு ஆகியன இடம்பெற்றன. நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ் மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், வட மாகாண அமைச்சின் செயலாளர் ரூபினி-வரதலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ம-4-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த (03.04.2021) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் இராமசாமி திருச்செல்வம்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து கண்மூடித்திறக்கும் நேரத்தில் எங்களை
தவிக்கவிட்டுப் பிரிந்தாலும் என்றும் எம்
உள்ளங்களில் நிலைத்திருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பலாலி றோட்,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

(cs.41259) (2.6)


### கர்ப்பிணி....

மரத்தில் பலாப்பழத்தை லசந்த பறித்துள்ளார். அதையடுத்து லசந்தவுடன் அவரது மாமனார் முரண்பட்டுள்ளார் என்றும், அதன் தொடர்ச்சியாக லசந்த கத்தியால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-எ-இ)

### வரிசை...

பிரச்சினைகள் விரைவில் தீரும். அவை தற்காலிகமானவை. முடிந்தால் எரிபொருள் இறக்குமதியை செய்து காட்டுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவருக்கு சவால் விடுக்கின்றேன்.

இவ்வாறு ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய மக்கள் சக்திக்கு எரிபொருள் மற்றும் எரிவாயு வழங்குவதற்கு மூன்று நாடுகள் தயார் நிலையில் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்துள்ளார். அவர் கூறுவது உண்மையெனில், அந்த நாடுகளுடன் பேச்சு நடத்தி முதலில் எரிபொருளை கொண்டு வரட்டும். அப்போது மக்கள் மத்தியில் அவருக்கான செல்வாக்கு அதிகரிக்கும். இதோ கோத்தாபயவால் முடியாததை சஜித் செய்துவிட்டார் என மக்கள் பாராட்டுவார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் அவர் அதைச் செய்ய வேண்டும். ஏனெனில் அவர் தலைமையிலான ஆட்சி எப்போது வரும் என தெரியாது. அதுமட்டுமல்ல இந்தப் பிரச்சினைகளுக்கு இன்னும் ஓரிரு வாரங்களில் தீர்வை கண்டுவிடுவோம். வரிசை யுகத்துக்கு முடிவு கட்டப்படும். முடிந்தால் எரிபொருளை வரவையுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவருக்கு சவால் விடுக்கின்றேன். நாம் ஒளியவில்லை. மக்களுடன்தான் இருக்கின்றோம். தேர்தலொன்று வரும்போது அரசின் பலம் தெரியவரும் - என்றார். (அ-எ-44)


**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு, இத்துறையில் அனுபவமுள்ள களஞ்சிய காப்பாளர் (Store Keeper) தேவை.

தொடர்பு: **077 944 8109, 076 7600 403**
**Email:jenoshanark@gmail.com**


### இலங்கை...

இவ்வாறு அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான துணை இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார். கொழும்பு வந்துள்ள அவர், இலங்கை வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த பின்னர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமெரிக்காவுடன் ஒத்துழைப்புடனான அதிக வலுவான ஜனநாயக தன்மை மிக்க, வளம் மிக்க, நியாயமான இலங்கைக்கான எங்களின் பகிரப்பட்ட அபிலாஷைகள் தொடர்பாக நாங்கள் மிகவும் ஆழமான பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினோம். அண்மைய வாரங்களில் எடுக்கப்பட்டுள்ள நீதியை நோக்கிய காயங்களை ஆற்றுவதை, மனித உரிமைகளை, ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை நாங்கள் பாராட்டுகின்றோம். உலக வரலாற்றில் நெருக்கடியான வரலாற்றை கொண்ட பல நாடுகள் செயற்பட்டதை போல உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை அமைக்கும் எண்ணம் முக்கியமாக தென்னாபிரிக்க அனுபவத்தை பயன்படுத்தும் யோசனை மிகச்சிறந்தது. அதற்கு ஆதரவளிப்பதற்கு ஆர்வமாக உள்ளோம். அரச சார்பற்ற அமைப்பை சேர்ந்தவர்கள், பத்திரிகையாளர்கள் சிவில் சமூகத்தினர் மீதான கண்காணிப்பை தடுத்து வைத்தலை துன்புறுத் தல்கள் முடிவுக்கு கொண்டு வரவேண்டியதை நாங்கள் வலியுறுத்தவிரும்புகின்றோம் - என்றார். (அ-எ-இ)


வலி கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி

# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்" இற்கமைவாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு. கிறகோரி சந்திரசேகரன் ஆகிய நான் 2021.07.01 ஆம் திகதிய 2234/39 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

## கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம் (27.03.2022)

| கிளை இல | கிளையின் பெயர் | காலம் | நேரம் | கிளைப் பொதுச் சபைக்கூட்டம் நடைபெறும் இடங்களின் விபரம் | உத்தியோகத்தர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01. | அச்செழு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் | திரு.வீ.இரத்தினகாந்தன் |
| 02. | அச்செழு வடக்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | அச்செழு M.M.T.M. பாடசாலை | திருமதி.ச.பிருந்தாமலர் |
| 03. | நீர்வேலி வடக்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | நீர்வேலி கிளை இல. 03 | திரு.சி.குணாளன் |
| 04. | நீர்வேலி விக்னேஸ்வரா | 27.03.2022 | மு.ப 10.00 மணி | R.C. தமிழ் கலவன் பாடசாலை, நீர்வேலி வடக்கு | திரு.இ.கஜந்தன் |
| 05. | நீர்வேலி மத்தி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | நீர்வேலி மத்தி சனசமூக நிலையம் | திரு.த.கண்ணதாசன் |
| 06. | நீர்வேலி சந்தி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனை சங்கம், நீர்வேலி | திரு.ச.பிரேமிலன் |
| 07. | நீர்வேலி இராச வீதி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி | திருமதி.க.கௌசிகா |
| 08. | நீர்வேலி கரந்தன் | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கரந்தன் சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையம் | திரு.க.செந்தூரன் |
| 09. | நீர்வேலி கோவிலடி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | ஸ்ரீமுருகன் ஐக்கிய நாணயசங்கம், நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி | திரு.ச.பாலகுமார் |
| 10. | நீர்வேலி பூதர் மடம் | 27.03.2022 | மு.ப 10.00 மணி | ஸ்ரீமுருகன் ஐக்கிய நாணயசங்கம், நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி | திரு.க.திசாகரன் |
| 11. | நீர்வேலி ஐங்கரன் | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி | திரு.ஜோ.ஜெகதாஸ் |
| 12. | கோப்பய் சந்தி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | திரு.க.பரநிரூபன் |
| 13. | கோப்பய் விநாயகர் | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | திரு.க.வக்சன் |
| 14. | கோப்பய் கண்ணகை | 27.03.2022 | மு.ப 10.00 மணி | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோவிலடி, கோப்பாய் | திரு.ம.நிசாந்தன் |
| 15. | கோப்பய் அம்பாள் | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | திருமதி.சு.கஸ்தூரி |
| 16. | கோப்பய் இராசவீதி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கோப்பாய் காளிகோவிலடி சனசமூக நிலையம் | திரு.கு.நிசாந்தன் |
| 17. | கோப்பய் மத்தி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | நாவலர் வித்தியாலயம், கோப்பாய் மத்தி | திரு.இ.தனுசன் |
| 18. | கோப்பய் மத்தி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோவிலடி, கோப்பாய் | திரு.கு.வேணுகோபு |
| 19. | கோப்பய் மத்தி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடி ச.ச.நிலையம், கோப்பாய் | திரு.சி.சிறீதரன் |
| 20. | கோப்பய் தெற்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கலைமணி சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு | திரு.வி.சிவபாலன் |
| 21. | கோப்பய் தெற்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு | திருமதி.சி.இமெல்டா |
| 22. | கோப்பய் தெற்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | முழுமதி சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு | திரு.அ.சஞ்சயன் |
| 23 | உரும்பிராய் சந்தி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | ஞானவைரவர் சனசமூக நிலையம், உரும்பிராய் தெற்கு | திரு.இ.உ[illegible]யகுமார் |
| 24. | உரும்பிராய் தெற்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | அண்ணா சனசமூக நிலையம், யோகபுரம் | திரு.அ.தயாளன் |
| 25. | உரும்பிராய் கணேசா | 27.03.2022 | மு.ப 10.00 மணி | உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் | திருமதி.த.சிவகுமாரி |
| 26. | உரும்பிராய் கிழக்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | செல்லப்பா சனசமூக நிலையம், உரும்பிராய் கிழக்கு | செல்வி.வி.நிரோசிகா |
| 27. | உரு. சிவன் வீதி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | றோமன் கத்தோலிக்க பாடசாலை, உரும்பிராய் கிழக்கு | செல்வி.நா.கோபிகா |
| 28. | உரும்பிராய் கரந்தன் | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கலைவாணி சனசமூக நிலையம், உரும்பிராய் கரந்தன் | திரு.ச.ரதிகுலன் |
| 29. | உரும்பிராய் வடக்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கணேசா சனசமூக நிலையம், உரும்பிராய் வடக்கு | திரு.சி.பிரதீபன் |
| 30. | ஊரெழு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | ஊரெழு கணேசா வித்தியாலயம், ஊரெழு | திருமதி.ச.தயாதேவி |
| 31. | ஊரெழு மேற்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | ஊரெழு கணேசா வித்தியாலயம், ஊரெழு | திரு.ஐ.மயூரன் |
| 32. | ஊரெழு வடக்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | ஊரெழு கணேசா வித்தியாலயம், ஊரெழு | திரு.இ.வேல்குமார் |
| 33. | இருபாலை சந்தி | 27.03.2022 | மு.ப 10.00 மணி | கோப்பாய் மகாவித்தியாலயம், இருபாலை, கோண்டாவில் வீதி | திரு.ஜெ.சதீஸ் |
| 34. | இருபாலை கிழக்கு | 27.03.2022 | மு.ப 10.00 மணி | பாரதி சனசமூக நிலையம், இருபாலை கிழக்கு | திரு.க.கமலநாதன் |

கூ. அ.உ.ஆணையாளர் பணிமனை,
357, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
18.02.2022

ஒப்பம்: கிறகோரி சந்திரசேகரன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ். மாவட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 01 . 1968



இறப்பு 15 . 03 . 2022

## திரு. கோபாலபிள்ளை சிவசேகரம்

சரவணை மேற்கு காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கோபாலபிள்ளை சிவசேகரம் (சிவம்) கடந்த (15.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் பூமணி (கொழும்பு) தம்பதியரின் அன்பு மகனும் புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற புஸ்பம் மற்றும் சிவஞானம் தம்பதியரின் மருமகனும், கீதாஞ்சலியின் அன்புக் கணவரும் அனுஸ் அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் சந்திரசேகரம் (யாழ்ப்பாணம்), குணசேகரம் (கொழும்பு), ஞானசேகரம் (கொழும்பு), இராசசேகரம் (சுவிஸ்), புஸ்பராணி (லண்டன்), காலஞ்சென்ற மணிசேகரம் (ஓமந்தை) மற்றும் குலசேகரம் (சுவிஸ்), தவராணி (கனடா) , ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகாம்பிகை, கிருகாம்பிகை, சிவசோதி, லிங்கநாயகி (சுவிஸ்), பாக்கியநாதன் (லண்டன்), புவனேஸ்வரி (ஓமந்தை), சுதா (சுவிஸ்), மோகனதாஸ் (கனடா), காலஞ்சென்ற தர்மகுலராசா மற்றும் தர்மகுலசிங்கம், தர்மகுலராணி (பிரான்ஸ்), தர்மகுலதேவி, காந்தசொரூபி, வரதராசா, காலஞ்சென்ற இலங்கீரன் மற்றும் கலீதரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், அருந்தவம், ஶ்ரீஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயராசா, உத்தரதாசன், சாந்தினிதேவி, ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03. 2022) வியாழக்கிழமை (லண்டன் நேரப்படி) முற்பகல் 8.00 - 10.00 வரை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல. 108, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 07 12 459**
**077 66 36 947**

தகவல்:
ஐ.கோ. சந்திரசேகரம் (JP)
பிரதிப்பிரதம ஒழுக்காற்று அதிகாரி
(ஓய்வுநிலை) யாழ் பல்கலைக்கழகம்
கோ. ஞானசேகரம்

(cs 18993) (2.6)

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 20 . 10 . 1937



மறைவு 22 . 02 . 2022

## அமரர் தம்பிப்பிள்ளை உத்தமசீலன்

**(நாடகக் கலைஞர்)**

கடந்த (22.02.2022) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் தம்பிப்பிள்ளை உத்தமசீலன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.03.2022) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் காரைநகர் புனித தீர்த்தக்கரையிலும் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்னாரது இல்லத்திலும் நடைபெறுவதுடன் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் (26.03.2022) சனிக்கிழமை நல்லூர் திவ்யஜீவன மண்டபத்தில் (சட்டநாதர் சிவன் கோவில் அருகாமையில்) நடைபெறவுள்ளதால் அனைவரையும் அந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது தந்தையின் மறைவுச் செய்தியறிந்து நேரில் கலந்துகொண்ட தொலைபேசி, முகநூல் வாயிலாகவும், பதாகைகள், கண்ணீர் அஞ்சலிகள், பத்திரிகைகள், மலர்வளையங்கள் மூலமாகவும் அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பதிவாளர் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**077 880 3621**

(CS 18994) 1-8

# மரண அறிவித்தல்

## திருமதி சறோஜினிதேவி குருதேவ்



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், (தெல்லிப்பளை, வீமன்காமம்) 311, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி குருதேவ் அவர்கள் நேற்று (23.03.2022) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம்- அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-சரசுபதி தம்பதியரின் அன்பு மருமகளும், குருதேவ்வின் (மின்னியல் சார்ஜன்-காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை) அவர்களின் பாசமிகு மனைவியும், செந்தூரன், பிரபாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சகுந்தலாதேவி, சாரதாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜனனி (நீதிமன்றம்-சாவகச்சேரி), சசிக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரித்விஜன் அவர்களின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் ஶ்ரீவாமதேவன் (ஓய்வுநிலை ஆசிரியர்) அமரர்கள் சூரியதேவானந்தன், வாமதேவன், பஞ்சதேவன் மற்றும் இந்திரதேவன், மகாதேவன் (ஜேர்மனி), இந்திராணி (கனடா), ஜெயராணி (கொழும்பு), உதயராணி (கனடா), யோகராணி (சுவீடன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சசிகரன் (சுவிஸ்), சுதாகரன் (பிரான்ஸ்), ரூபாகரன் ஆகியோரின் சித்தியும், வாமினி (பிரதேச செயலகம்-தென்மராட்சி) அவர்களின் பெரிய தாயும், திரு.திருமதி ஜெயரட்ணம் நவமணி, திரு.திருமதி செல்லத்துரை நகுலேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2022) வியாழக் கிழமை ஏழாலை தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை தெற்கு,**
**சுன்னாகம்.**

(CS 18996) (4/6)

தகவல்:-
**குடும்பத்தினர்**
**077 605 5543**
**077 704 3561**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இணுவையம்பதி அருள்மிகு
# சிவகாமி அம்மன் கோவில்
## புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா
## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபன சிறப்பிதழ் 2022

**எண்ணெய்க்காப்பு**
இன்று 24.03.2022 வியாழக்
கிழமை காலை 8.00 மணிமுதல்
26.03.2022 சனிக்கிழமை
மதியம் 12.00 மணி வரை

"வையமாய் வாழ்வாய் எங்கும்
வல்லமைச் சக்தியாகி
மெய்ப்பொருள் ஞானச் சிவனின்
மேனியின் பாகமாகி
பெய்வளம் சுரக்கும் இணுவை
பெரும்பதி தனையே ஆளும்
தெய்வமாம் சிவகாமித் தேவி
திருக்கழல்கள் போற்றி போற்றி"

**மஹா கும்பாபிஷேகம்**
27.03..2022
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.05 மணி முதல்
மதியம் 11.05 மணி வரை

### அம்பிகை அடியார்களே!

ஆன்மாக்கள் அனைத்தும் நல்வழிப்பட்டு பிறவிப்பயனை அடைதற்காக எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் திருவருட்சக்தியை வேதசிவாகம, தியான, ஆவாஹநாதி வழிபாட்டினால் உருவத்திருமேனிகளில் சாந்தித்தியம் பெறவைத்து பிரார்த்திப்பதே மஹா கும்பாபிஷேகத்தின் தத்துவமாகும்.

இந்து மஹா சமுத்திரம் ஈன்றெடுத்த முத்தென மிளிரும் குபேரபுரியாம் ஈழமணித்திருநாட்டில் கலையும், கல்வியும், கமமும் சிறப்புற்றோங்கும் யாழ்க்-குடா மத்தியில் ஆன்றோர்கள், சன்றோர்கள், வணிகப் பெருமக்கள், தர்ம ஆன்மீகவான்கள் வாழும் இணுவில் கிராமந்தன்னில் அன்னை பராசக்தி தாய் சிவகாமி எனத் திருநாமம் கொண்டு அருளாட்சி புரியும் கோயில். பாரிய பளிங்குத்திருப்பணி, தெற்கு, மேற்கு, வடக்கு வாயில் அமைப்போடு கூடிய கோபுர கர்ண சாலை அமைப்பு, புராண கதா திருவுருவ சுதை அமைப்பு, இராஜகோபுர பாவை அமைப்பு, ஓம்காரநாத நூதன மணிக்கோபுர நிர்மாணம், பரிவார கோஷ்ட சந்நிதி அமைப்பு, பாரிய கூரை அமைப்பு என்பவற்றோடு பலமிக்க தூண்களும் கலைமிகு சிற்பங்களும், கண்கவர் வர்ணப்பூச்சும், கல்யாண மண்டபமும் எனப் பாரிய திருப்பணிகள் நிறைவுற்று அன்னை சிவகாமியின் அருட் கிருபையால் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவானது.

நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ பிலவ வருஷம் பங்குனித்திங்கள் 13ஆம் நாள் 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை, உத்தராட நட்சத்திரமும் தசமி தியும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 09.05 மணி முதல் 11.05 மணி வரை வரும் இடபலக்ன சுபமுகூர்த்த வேளையில் நடைபெற இருப்பதால் அதனை முன்னிட்டு ஏழு தினங்களாக நடைபெறும் இக்குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழாவில் கலந்து வழிபாடாற்றி விழாப் பொலிவைத்தரிசித்து இகபர சுகங்கள் பெற்று இன்புற்று வாழ்வீர்களாக.

**மாலை 5.00 மணிக்கு சுமங்கலி பூஜை தீபலஷ்மீ நாராயண பூஜை, தீபஸ்தாபனம், கும்ப மூர்த்திகள் யாகசாலா பிரவேசம், யந்த்ர மிப ஸ்தாபனம், அஷ்பந்தனம், வேதிகாபூஜை, அக்னி விபஜனம் மூல காயாத்ரி மந்த்ர ஹோமம்.**

**24.03.2022 வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல்**
**26.03.2022 மதியம் 12. 00 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தலாம்.**

**பங்குனித் திங்கள் 10ஆம் நாள் 24.03.2022 வியாழக்கிழமை**

| | |
|---|---|
| காலை 07.00 மணி | ஸ்ரீ நிருத்த கணபதி வழிபாடு, விஷேச சந்தி, தைலாப்பியங்கம், இரண்டாம்கால யாக பூஜை, பாவனாபிஷேகம் ஸஹஸ்ரநாம ஹோமம் |
| மாலை 4.00 மணி | ஸ்ரீ சக்தி கணபதி பூஜை, பூதசுத்தி தர்மத்துவஜபூஜை, 3ஆவது கால யாக பூஜை, யஜனம், திரிசதீநாம ஹோமம். |
| இரவு 9.00 மணி | இணுவையூர் தமிழ்ச் சங்கம் வழங்கும் வில்லிசை |

| சர்வ சாதகாச்சார்யர் | பிரதிஷ்டா பிரதமகுரு | சர்வபோதகாச்சார்யர் | ஸ்தபதி |
|---|---|---|---|
| சிவாகம கலாநிதி. சைவ சித்தாந்த சரபம் சிவஸ்ரீ.A.V. சுவாமிநாத சிவாச்சாரியார் அதிபர், சிவபுரம் வேதசிவாகம பாடசாலை குருகுலம் மயிலாடுதுறை, தமிழ்நாடு, இந்தியா | "வேத சிவாகம கிரியாரத்னம்" சிவஸ்ரீ.சாம்பசிவ.சோமசபேசக் குருக்கள் பிரதம குரு, அருள்மிகு சிவகாமி அம்மன் கோயில் இணுவில் | "மந்திர கிரியா சுரபி" சிவஸ்ரீ. குமார.சரவணபவக்குருக்கள் JP. பிரதமகுரு, ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி கோவில் காரைக்கால் (இணுவில்) | கலியபெருமாள் புருஷோத்தமன் ஸ்தபதி கொள்ளிடம், சீர்காழி, தமிழ்நாடு |
| **பூமாலை அலங்காரம்** | **மங்கள இசை** | **ஒலி ஒளி அமைப்பு** | **கட்டட நிர்மாணம்** |
| வி.விஜிகரன் உரும்பிராய் | கண்ணபிரான் குழுவினர் இணுவில் | ராஜன் ஒலி ஒளி கந்தரோடை | க.சாரங்கன் SKS கட்டுமானம் ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் |

## தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்


குடும்பாபிஷேகம் சிறக்க அனுசரணை



# விக்னேஸ்வரா
## பெயின்ற்ஸ் & எலக்ரிக்கல்ஸ்



asianpaints CAUSEWAY

எல்லா விதமான வர்ணபூச்சுக்கள், வீட்டு மின்இணைப்பு உபகரணங்கள்
எல்லாவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளமுடியும்.

A NEW WORLD OF
LUXURY INTERIOR
- FINISHES-




இல.170, பலாலி வீதி, கோண்டாவில். தொ.பே.: 021 222 4844


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 12 . 1951

மறைவு 04 . 04 . 2021



கடந்த (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் வேலுப்பிள்ளை தர்மலிங்கம்

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திக்கிரியைகள் நாளை (25.03.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைகின்றோம்

ராணி பவன்
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி வடக்கு.
021 226 5479

குடும்பத்தினர்

(cr.37701) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 02 . 1959

இறப்பு 21 . 03 . 2022



## திருமதி விநாயகா அருட்பிரகாசம்

3ஆம் யூனிற் பாரதிநகர் மல்லாவியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விநாயகா அருட்பிரகாசம் 21.03.2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருட்பிரகாசத்தின் அன்பு மனைவியும் Dr.செந்தில்குமரன் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை/ கஜமுகன் Dental Care - நெல்லியடி), மோகனதாஸ் (கனடா), ஜெனனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் தீபா, லோகேஸ்வரி, சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியும் அஜீஷ், ஆதித்யா, சஜீஸ், சஜீனா, ஹர்ஜின், தஜ்னிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.03.2022) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பாலியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.311, 3ஆம் யூனிற்,
பாரதிநகர், மல்லாவி.

தகவல்
குடும்பத்தினர்

(CS) (4/6)

# உடனடி வேலைவாய்ப்பு

வவுனியாவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Tile Showroom இல் பணியாற்றுவதற்கு கணினி அறிவுடைய பெண் பணியாளர் ஒருவர் உடன் தேவை.

JAI RAM CERAMIC
VAVUNIYA - 077 185 3478

# வாடகைக்கு

யாழ். கந்தர் மடத்துச் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள வீட்டில் வாடகைக்கு அறைகள் உண்டு. சைவ உணவு உண்பவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்

தொடர்புக்கான எண்: 077 419 5213

# விண்ணுலக வாழ்வில் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 01.04.1950 மறைவு: 12.04.2019

## அமரர் புனிதவதி (தேவி) நடராசா (மண்டைதீவு)

திதி : ஸப்தமி

உயிருக்குயிராக இருந்து பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய், பாசத்தால் எம்மையெல்லாம் அரவணைத்து, வழிகாட்டிய குலவிளக்கே, உங்கள் நினைவுகளில் மிதக்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மண்டைதீவு திருவெண் காட்டானை வேண்டுகிறோம்.

21, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.18880) (2.6)

# அரசாங்க அறிவித்தல்
# பகிரங்க ஏலவிற்பனை
# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிப்பதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணி வரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏலவிற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் - பருத்தித்துறை | 28/03/2022 திங்கட்கிழமை | மு.ப. 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 02 | பிரதேச செயலகம் - கரவெட்டி | 28/03/2022 திங்கட்கிழமை | மு.ப. 11.00 | பி.செ கரவெட்டி |
| 03 | பிரதேச செயலகம் - தெல்லிப்பளை | 29/03/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 04 | பிரதேச செயலகம் - உடுவில் | 29/03/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.30 | பி.செ உடுவில் |
| 05 | பிரதேச செயலகம் - கோப்பாய் | 29/03/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப 11.30 | பி.செ கோப்பாய் |
| 06 | பிரதேச செயலகம் - காரைநகர் | 30/03/2022 புதன்கிழமை | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 07 | பிரதேச செயலகம் - சங்கானை | 30/03/2022 புதன்கிழமை | மு.ப 10.30 | பி.செ சங்கானை |
| 08 | பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் | 30/03/2022 புதன்கிழமை | மு.ப 11.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 09 | பிரதேச செயலகம் - நெடுந்தீவு | 30/03/2022 புதன்கிழமை | பி.ப 02.00 | பி.செ நெடுந்தீவு |
| 10 | பிரதேச செயலகம் - மருதங்கேணி | 31/03/2022 வியாழக்கிழமை | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 11 | பிரதேச செயலகம் - நல்லூர் | 31/03/2022 வியாழக்கிழமை | மு.ப 11.30 | பி.செ நல்லூர் |
| 12 | பிரதேச செயலகம் - வேலணை | 01/04/2022 வெள்ளிக்கிழமை | மு.ப 09.30 | பி.செ வேலணை |
| 13 | பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை | 01/04/2022 வெள்ளிக்கிழமை | மு.ப 11.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 14 | பிரதேச செயலகம் - சாவகச்சேரி | 04/04/2022 திங்கட்கிழமை | மு.ப 09.30 | பி.செ சாவகச்சேரி |
| 15 | பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம் | 04/04/2022 திங்கட்கிழமை | மு.ப 11.00 | பழைய யாழ்ப்பாணப் பிரதேச செயலக கட்டடம் (சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக) |
| 16 | தகவல் தொழிநுட்ப பூங்கா- யாழ்ப்பாணம் | 05/04/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப. 09.30 | தகவல் தொழிநுட்ப பூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க கட்டடம் |
| 17 | மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் | 05/04/2022 செவ்வாய்க்கிழமை | மு.ப 11.00 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

க.மகேசன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(cr.37700)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வகட்சி...

கடுப்பாகிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மீது கடும் விசனத்தை வெளியிட்டுள்ளார்.

சர்வகட்சி மாநாடு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பமானது. கூட்டத்தின் ஆரம்பத்தில் நாட்டின் பொருளாதார நிலைவரம் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் விளக்கமளித்தார். அதில் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு முன்னைய அரசாங்கமே காரணம் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். அதன்பின்னர் கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க, அஜித் நிவாட் கப்ராலின் கருத்துகளுக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோரிக்கைக்கமையவே இந்த சர்வகட்சி மாநாடு நடைபெறுகின்றது. மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என்று தனிப்பட்ட ரீதியில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவும் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். தற்போதைய சூழ்நிலையில் இது முக்கியம். எனவே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவே இங்கு வந்துள்ளோம். மாறாக கட்சி அரசியலை முன்னெடுப்பதற்காக அல்ல.

கடந்த ஆட்சியால்தான் இந்நிலைமை என விளித்தே மத்திய வங்கி ஆளுநர் விளக்கமளித்தார். இதற்கு நான் பதில் வழங்கப்போனால் என்ன நடக்கும்? இது தொடர்பான வாக்குவாதமே தொடரும். இறுதியில் விஜயன் மன்னன், இங்கு வந்ததால்தான் இந்தநிலைமை என்ற முடிவுக்குகூட வரலாம். அந்தக் கட்டத்துக்கு நாம் செல்லக்கூடாது.

எதிரணிகளை தோற்கடிக்க நாம் இங்கு வரவில்லை. நிலைமை பற்றி தெளிவுபடுத்தி, எதிரணிகளுக்கு விளக்கமளித்து அவர்களையும் இணைத்துக்கொள்வதே எமது நோக்கம் என்று கூறி தமது யோசனைகளை ரணில் விக்கிரமசிங்க முன்வைத்தார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, மத்திய வங்கி ஆளுநரின் அறிவிப்புமூலம் உங்களுக்கு (ரணில்) ஏதேனும் மன வேதனை ஏற்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்பு கோருகின்றேன் - என்றேன். (எ-44)

## மாற்றிப்பேசிய...

விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் உரையாற்றிய ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, "இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசு தவறியுள்ளது. எமக்கு வழங்கிய வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன. பல கட்சிகள் மாநாட்டில் பங்கேற்காமைக்கு இதுவும் ஓர் காரணமாகும்" - என்று சுட்டிக்காட்டினார்.

அப்போது குறுக்கீடு செய்த நிதி அமைச்சர் பஸில், " மன்னிக்கவும், சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை , எமக்கு இன்னமும் முழுமையாக கிடைக்கப்பெறவில்லை" எனக் கூறினார்.

"அப்படியானால் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதியை அழைத்து அது பற்றி விளக்கம் கேட்கலாம்." என்று ரணில் பதிலளித்தார்.

" அறிக்கை எமக்கு கிடைக்கவில்லை என்பதை பொறுப்புடனேயே நான் கூறுகின்றேன்" என்று நிதி அமைச்சர் பதிலுக்குத் தெரிவித்தார்.

" பிரதிநிதியை அழைத்து அறிக்கையை வழங்குங்கள் என்று நாம் கோருவோம்" என ரணில் தெரிவிக்க, " எமக்கு டிராப்ட் (வரைவுநகல்) தான் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது " என்று பஸில் குறிப்பிட்டார்.

"அறிக்கை வரவில்லை என்றீர்கள், இப்போது டிராப்ட் வந்துள்ளதை ஏற்றுக்கொள்கின்றீர்கள்." என ரணில் வாதிட்டார்.

"உங்களுக்கு வரைவுநகலா வேண்டும்? அதனை வழங்கமுடியாது" என பஸில் பதிலுக்கு சீற்றத்துடன் கேள்வியெழுப்பினார்.

அதற்கு அசராத ரணில் விக்கிரமங்க, "எனக்கு வழங்க வேண்டாம். அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும்" என கடுந்தொனியில் பதில் கொடுத்தார். (அ-எ-44)

## தமிழகம்...

யில் பாதுகாப்புத் தரப்பினரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகத்துக்கு படகுகள் மூலம் 16 பேர் நேற்றுச் சென்றுள்ள நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை விட்டுத் தப்பிச் சென்றதாக விசாரணைகளில் தெரிவித்துள்ளனர். அவர்களில் மன்னார், எமில்நகரில் இருந்து தமிழகம் சென்ற குடும்பத்தின் உறவினர்கள், நண்பர்களுக்கே பாதுகாப்புத் தரப்பினரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிவில் உடையில் வந்த கடற்படையினர் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர் என்றும், தமிழகத்துக்குச் சென்ற பெண்ணின் பெற்றோரைக் கைது செய்ய முயன்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. சிவில் உடையில் பலர் தொடர்ச்சியாக விசாரணை என்று கூறி, வீட்டுக்கு வருகின்றனர் என்றும், தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாது அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்கின்றனர் என்றும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த அச்சுறுத்தல் காரணமாகத் தாங்கள் பொலிஸ் நிலையத்தில் அல்லது மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வது தொடர்பில் ஆலோசிக்கின்றோம் என்றும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-எ-213-56)

## தெல்லிப்பழை...

கும்பாபிஷேக திருவிழாவில் அடியவர்களிடம் நகைகளை அபகரித்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி - சாந்தபுரத்திலிருந்து வந்த நால்வரே இந்த நகை அபகரிப்பில் ஈடுபட்டனர் என்று சந்தேகிக்கப்படும் நிலையில், இரு ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், பெண்கள் இருவர் தலைமறைவாகியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருவிழாவில் பங்கேற்ற அடியவர்கள் நால்வரிடம் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டன. அவர்கள் மூதாட்டி ஒருவரிடம் தங்கச் சங்கிலி அச்சுறுத்திப் பறிக்கப்பட்டிருந்தது. நகைகளைப் பறிகொடுத்த நால்வரும், அது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும், கிளிநொச்சி - சாந்தபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், 33 மற்றும் 37 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் வான் ஒன்றில் இங்கு வந்துள்ளனர்.

நகைகளை அபகரிக்க உதவினர் என்று சந்தேகிக்கப்படும் இரு பெண்கள் தலைமறைவாகியுள்ளனர். அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைககள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து கைச்சங்கிலி ஒன்றும், சங்கிலி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர்கள் பயணித்த வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். (அ-எ-26)

## தமிழர்களது...

ஒத்துழைப்பைப் பெறுவதே ஒரே வழி. இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்.

நேற்று நடந்த சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், பரிந்துரைகள் அடங்கிய ஆவணம் ஒன்றைக் கையளித்தார். அந்த ஆவணத்திலேயே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பல தசாப்தங்களாக நாட்டில் நிலவும் இன நெருக்கடியை, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் கொள்கை, அணுகுமுறை மற்றும் தவறான நிர்வாகக் கையாளுகையே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு உண்மையான காரணமாகும். சுயாட்சி அதிகாரத்துக்கான தமிழ் மக்களின் அபிலாஷைக் கோரிக்கைக்கு முன்னதாகவே எமது நாட்டின் அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த அரசியல் தீர்வை அடைந்திருக்க முடியும்.

ஆயினும், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் சித்தாந்தத்தால் உந்தப்பட்ட அரசாங்கங்கள் அரசியல் பிரச்சினைக்கு இராணுவ தீர்வைத் தேர்ந்தெடுத்தன. உண்மையில், அதுவே இன்றைய பேரழிவு காரணமான கடன் நெருக்கடிக்குள் நம் நாட்டைத் தள்ளிவிட்டுள்ளது. நீங்கள் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்தால், பல தசாப்தங்களாக சிங்கள பௌத்த பெரும்பான்மை சித்தாந்தத்துடன் நடத்தப்பட்ட போரானது இன்று எமது நாட்டின் அனைத்து சமூக மக்களினதும் தோள்களில் ஒட்டுமொத்த பொருளாதாரச் சுமையையும் சுமத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளை தோற்கடித்த பின்னரும்கூட, தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து வந்த எமது நாட்டு அரசாங்கங்கள் மேற்கொள்ளவில்லை. மாறாக நீங்கள் பாதுகாப்புச் செயலாளராக செயற்பட்ட அப்போதைய அரசாங்கம், தமிழ் மக்களை போரில் வெற்றிகொண்டுவிட்டோம் என்கின்ற மனப்பான்மையுடன் தொடர்ந்தும் எமது நாட்டை ஆட்சி செய்து, தமிழ் மக்களை அந்நியப்படுத்தியது. அதுவே, அந்தநேரத்தில் பெரும் ஆற்றலையும், விருப்பத்தையும் கொண்டிருந்த புலம்பெயர்ந்த தமிழர்கள் நம் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிப்பதை தடுத்திருத்தது.

2009 இல் போரை முடிவுக்குக் கொண்டுவந்த அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் எவ்வளவோ விடயங்களைச் செய்திருக்கலாம். 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலான அரசியல் தீர்வொன்றை நாட்டில் உள்ள அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவகையில் காணப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தமிழ் மக்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் உட்பட பல்வேறு சர்வதேச தலைவர்களுக்கும் உறுதியளித்திருந்தார். அவர் அதைச் செய்திருந்தால், புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமிருந்து இன்னும் அதிகமான முதலீட்டாளர்களை ஈர்த்திருப்பார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாட்டின் மிக சக்திவாய்ந்த மனிதராக இருந்தபொழுது, அரசியல் தீர்வுக்கான சாத்தியமான யோசனையாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவால் முன்மொழியப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியம் என்கின்ற ஓர் அரசியல் தீர்வு இருந்தது. அதை இந்த நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்றிருந்த மஹிந்த ராஜபக்ச இலகுவாக நடைமுறைப்படுத்தியிருக்கலாம். குறைந்தபட்சம் 13வது திருத்த வரைவை, அதன் ஆரம்ப அசல் வடிவிலேயே முழுமையாக நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். ஆனால், அதற்கான துணிவு அவருக்கு இருக்கவில்லை. நாட்டில் முதலீடு செய்வதற்கு பெரும் ஆற்றலுடன் இருந்த புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழ் மக்களுக்கு உரிய இடத்தை வழங்க அரசாங்கம் முன்வராததால் விலகி நிற்க முனைந்தனர்.

இதற்கிடையில், எமது நாட்டில் முதலீடு செய்ய ஆர்வத்துடன் வந்த புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் கடுமையான விதிமுறைகளைக் கடந்து அரசாங்கத்தின் சிங்கள அதிகாரிகளிடம் அனுமதி பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. முதலீட்டாளர்கள் மீது சுமத்தப்பட்ட தாங்க முடியாத மற்றும் சட்டத்துக்குப் புறம்பான சுமைகள் அவர்கள் தங்கள் பணத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் வசிக்கும் நாடுகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது என்பதை நான் உங்களுக்கு கூறமுடியும். சில முதலீட்டாளர்கள் நாட்டின் தென்பகுதியிலேயே முதலீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டனர். தனிப்பட்ட முறையில், இதுபோன்ற சில சம்பவங்களை நான் அறிவேன்.

இந்தப் பின்னணியில் தமிழ் மக்களின் சுயநிர்ணய ஆட்சிமுறை என்கின்ற நீண்ட கால அபிலாஷையை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு நிரந்தரத் தீர்வை எட்டும் வரை, ஒரே நாட்டுக்குள் அரசியல் தீர்வு காண்பதற்கான பரிந்துரையாக குறைந்தபட்சம் ஏற்கனவே அரசமைப்பில் உள்ள அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அதன் ஆரம்ப வடிவிலேயே, முழுவதுமாக செயற்படுத்த வேண்டும் என்று எமது கட்சியின் சார்பில் பரிந்துரைக்க விரும்புகிறேன். இத்தகைய நடவடிக்கை ஒன்று மாத்திரமே தற்போதைய பொருளாதார அவல நிலையில் இருந்து நமது நாட்டை மீட்பதற்கான ஒரே வழியென நான் திடமாக நம்புகின்றேன். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இணக்கமான அரசியல் தீர்வைக் கண்டறிவது நிச்சயமாக எமது நாட்டை ஆசியாவின் சொர்க்கமாக மாற்றும் என்பதையும் நான் தங்களின் கவனத்துக்கு கொண்டுவர விளைகிறேன் - என்றுள்ளது. (அ-எ-இ)

## யாழ். மாவட்ட...

வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி செ.நிக்கொலஸ்பிள்ளை பிரதேச செயலர்களுக்கு அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு, ஒருங்கிணைப்புக்குழுவுக்கு பிரதமரின் பிரதி நிதியாக நியமிக்கப்பட்ட கீதநாத் காசிலிங்கம், யாழ். மாவட்டச் செயலரைக் கோரியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை அடுத்த மாதம் கூட்டுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஒ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...**

### புத்தாண்டுக்கு...

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவதற்கு பல்வேறு நாடுகளிடம் இலங்கை கையேந்திவரும் நிலையில், நிதியமைச்சர் பசில் ராஜபக்ச இந்தத் தகவலை நேற்று நடந்த சர்வகட்சிக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவை முன்வைத்த புதிய வரவு – செலவுத் திட்ட யோசனையை தாம் ஏற்றுக்கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து, அவர்களை மீட்டெடுக்கும்வகையில் இந்த வரவு – செலவுத் திட்டம் அமையும் என்றும் நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

### நெருக்கடிக்கு...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி அரசியல் ஆதாயம் தேடுவதற்கான முயற்சி என்பதை நிராகரிக்கின்றேன். இன்றைய சந்திப்பை தவிர்த்துள்ள அரசியல் கட்சிகள் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அனைத்து கட்சி கூட்டங்களில் கலந்து கொள்ளவேண்டும்.

இந்த நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான பொறுப்பு அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்கும் உண்டு. கூட்டத்தைப் புறக்கணித்த கட்சிகளின் யோசனைகளை செவிமடுக்க தயார் என்று அவர் தெரிவித்தார். (எ-இ)

### முஸ்லிம்...

இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன சர்வகட்சி மாநாட்டை புறக்கணிக்க தீர்மானித்திருந்தாலும் அந்தக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டை புறக்கணிப்பதற்கு மேற்படி இரு கட்சிகளும் தீர்மானம் எடுத்திருந்தன. இது தொடர்பில் ஊடகங்களுக்கும் அறிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன.

ஆயினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நசீர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜாரப் ஆகியோர் மாநாட்டில் பங்கேற்றிருந்தனர். அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தின்போதும் இவர்கள் இருவரும் கட்சி முடிவைமீறி அதற்கு ஆதரவு வழங்கியிருந்தனர். (அ-எ-44)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்

## திருத்த நகலைக் கிழித்தெறிந்து ரவூப் ஹக்கீம் மன்றில் ஆவேசம்

கொழும்பு, மார்ச் 24

**பயங்கரவாதத் தடைச்சட்டம் எமது நாட்டு சட்டக்கட்டமைப்பில் இருந்து முற்றாக நீக்கப்படவேண்டும் என்று தெரிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், திருத்த நகலைக் கிழித்தெறிந்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டவரைவு இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு எதிர்ப்பை வெளிக்காட்டினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடை சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவந்து சர்வ தேசத்தை ஏமாற்றும் செயற்பாடே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இந்தச் சட்டம் தொடர்பாக நீதிபதிகள் பலரும் தமது மாற்றுக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் நாட்டு மக்கள் பலருக்கு பல இன்னல்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது வெட்கக்கேடானது.

எனவே இந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. முன்னாள் பிரதமர் ரணில் தனது அனுபவங்களை முன்வைத்துக் கருத்துத் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவரும் கட்சி நிலைப்பாட்டைத் தெரிவித்தார்.

அரசியல் நோக்கில் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுவது வெட்கக்கேடானது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை வேறுபக்கத்துக்குச் செல்கிறது.

கர்தினால் ஜெனிவாவுக்குச் சென்றார். படையினர் இதில் தொடர்புபட்டுள்ளனரா என ஆராயுமாறு மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் கோரியுள்ளார். எந்தக் குற்றச்சாட்டுமின்றி பலர் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதனால் பயங்கரவாதச் தடைச்சட்டம் எமது நாட்டு சட்டக்கட்டமைப்பிலிருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும் – என்றார்.

இவ்வாறு தெரிவித்த பின்னரேயே பயங்கரவாதத் திருத்தச்-சட்ட நகலை ஹக்கீம் கிழித்தெறிந்தார். (ம)

### ரவிசங்கர்ஜியின் ஆனந்த அனுபவப்பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜியின் "ஆனந்த அனுபவப்பயிற்சி" நாளை 25 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை மாலை 4 மணிமுதல் இரவு 7 மணிவரை மகேஸ்வரன் நல்லூர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (14)

# பயங்கரவாதச் சட்டத்தில் பெரிய மாற்றங்களில்லை

## கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 24

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் உள்ள குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்பது மிகவும் அச்சுறுத்தலான விடயம். இப்போதும் இந்த சட்டத்தில் இதே நிலைமையே காணப்படுகின்றது. இவற்றில் எந்த மாற்றங்களையும் அரசாங்கம் செய்யவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சுட்டிக் காட்டியுள்ளது. நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பயங்கரவாதத் தடுப்பு திருத்தச் சட்டவரைவு இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது அரசியல் ரீதியான சட்டம் என ரணில் விக்ரமசிங்க கூறினார்.

ஆனால் இது அரசியல் ரீதியானது அல்ல. அரசமைப்புக்கு முரணாகவே இது கொண்டுவரப்பட்டது. பயங்கரவாதத்தை இது தடுக்கவில்லை. இது குறித்துப் பல சாட்சியங்கள் உள்ளன. நானும் சில வழக்குகளில் முன்னிலையாகியுள்ளேன். குறிப்பாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இதில் அச்சுறுத்தலான விடயமாக உள்ளது. வற்புறுத்தப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படுகின்றது. இப்போதும் இதே நிலைமையே காணப்படுகின்றது.

இவற்றில் எந்த மாற்றங்களையும் அரசாங்கம் செய்யவில்லை.

தடுப்புக்காவல் காலத்தை 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக குறைத்ததாகக் கூறப்படுகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. 18 மாதங்களுக்குப் பின்னர் குறித்த நபர் விடுவிக்கப்படுவது நியாயமானதா? அல்லது 12 மாதங்களுக்குப் பின்னர் விடுவிப்பது நியாயமானதா? பிணை வழங்கப்படும் என்றாலும்கூட மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கினாலும் மேல் நீதிமன்றம் அதனை நிராகரித்து விசாரணைகள் முடியும் வரையில் நபரைத் தடுத்து வைக்கமுடியும்.

இந்தச் சட்டத்தின் கீழ் 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜே.வி.பி.யினர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போது முஸ்லிம் சமூகமும் பாதிக்கப்பட்டு வருகின்றது. எனவேதான் சகல மக்களும் இந்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி வருகின்றீர்கள். தவறான ஒரு முயற்சியை ஆரம்பித்து அது நல்ல நகர்வு, அதற்கான ஆரம்பத்தைக் கையாண்டுள்ளோம் எனவும் இதனைத் தொடர்வோம் எனவும் கூறுகின்றீர்கள். அதேபோல் உலகத்தை ஏமாற்ற நினைக்கின்றீர்கள். இதில் மறுசீரமைப்பு என்ற சொல்லுக்கான அர்த்தத்தையே மாற்றியுள்ளீர்கள். ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தை முழுமையாக நாம் எதிர்க்கின்றோம். இதேவேளை பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும் என்பதைக் கோரும் எமது போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் – என்றார். (ம-22)

# புதிய பெறுமதிசேர் வரிச் சட்டவரைவு இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

திருத்தங்களுடன் கூடிய பெறுமதிசேர் வரிச் சட்டவரைவு இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அரச நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், நிதிச் சேவை வழங்கலுக்கு பெறுமதி சேர் வரி 15 வீதத்திலிருந்து 18 வீதமாக அதிகரிக்கப்படும்.

இதற்கு மேலதிகமாக எந்தவொரு தொற்று நோய் சூழல் அல்லது மக்களுக்கான அவசர சூழலின்போது அரச மருத்துவமனைகள் மற்றும் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்படும் மருத்துவ உபகரணங்கள், மற்றும் ஔடத நன்கொடைகளுக்கு மாத்திரம் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிப்பு வழங்குவதற்கான ஏற்பாடும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**விற்ப்பனைக்கு**

சட்டறிங் வேலைக்கு பயன்படுத்தும் Jackமுட்டு (G.I)- 500NOS விற்ப்பனைக்கு உண்டு

தொடர்புகட்க - 077 071 1111

(cs.43748) (2.7)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்த New Colombo Fashion புடைவைக் கடைக்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

நேர்முகத்தேர்வு : 26.03.2022 நடைபெறும்.

தொடர்பு:

074 014 3051, 077 067 6744, 077 838 9099

(CS 43746) 1-6

**வேலையாள்கள் தேவை**

யாழ்நகரில் உள்ள பிரபலமான கடைக்கு முன் அனுபவமுள்ள வேலையாள்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

மாத சம்பளம்: 40000 /= இற்கு மேல்

076 799 0252

(cs.43748) (2.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.